# மன்னா

"ஏனெனில் அவரே (இயேசுக் கிறிஸ்துவே) நமக்கு அமைதி அருள்பவர்"
(எபேசியர் 2 : 14)

விலை ரூபா 12.00

மன்னார் மறை மாவட்டத்தின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை

பொழிவு 15 | புரட்டாதி, 2002 | (தனிச் சுற்றுக்கு மட்டும்) | குவிப்பு 87

மன்னார் மறை மாவட்ட வெளியீடு / PUBLISHED BY THE DIOCESE OF MANNAR


### பேச்சுவார்த்தை ஆரம்பித்த தினமாகிய புரட். 16ந் திகதி மடுத்திருப்பதியில் உபவாச செபம்

# நீடித்த அமைதி வேண்டி கூடி வந்த மக்கள் கூட்டம்!



இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அமைதிப் பேச்சுவார்த்தை ஆரம்பித்த தினமாகிய புரட்டாதி 16ந் திகதி மன்னார் மறைமாவட்ட இறைமக்கள் மன்னார் ஆயர் குருக்கள் துறவிகளோடு இணைந்து மடுத் திருப்பதியில் ஒரு நாள் உபவாச செபத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மன்னார் மறைமாவட்டத்தின் பல பங்குகளில் இருந்து கால் நடையாகவும் வாகனங்களிலும் பல நூற்றுக்கணக்கானவர்கள் இச் செபநிகழ்வுக்கு வருகை தந்திருந்தனர். இலங்கை இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நேரடிப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்ட முதல் நாளில் அமைதிப் பேச்சுவார்த்தைக்காக ஆண்டவரின் அருள் வேண்டி இச்செப நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பேச்சுவார்த்தையில் ஈடுபடுவோர் ஆண்டவரின் அருள் வல்லமையினால் நிறைக்கப்பட வேண்டும் என்றும் ஆண்டவர்தாமே அங்கு பிரசன்னமாக இருந்து அவர்களை இயக்க வேண்டும் என்றும் பேச்சுக்களின்போது ஏற்படும் தடைகளை தகர்த்து நீடித்த நிலையான அமைதியை அருளவேண்டும் என்றும் இச்செப வழிபாடு இடம்பெற்றது.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

### சுதந்திர இந்தியாவின் மாபெரும் இந்தியர் பட்டியலில்

## அன்னை திரேசா முதலிடம்



சுதந்திர இந்தியாவில் மாபெரும் இந்தியர்கள் என்ற பட்டியலில் அன்னை திரேசாவிற்கு இந்திய இதழ் ஒன்று முதலிடத்தைக் கொடுத்துள்ளது. "கைஸ்லஸ்" என்ற பத்திரிகை 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களிடமிருந்து எடுத்த கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில் அன்னை திரேசா முதலிடத்தையும், இந்தியாவின் பிரதமராக 15 ஆண்டுகள் பணியாற்றிய இந்திரா காந்தி நான்காவது இடத்தையும் பிரதமர் வாஜ்பாய் பத்தாவது இடத்தையும் பெற்றுள்ளனர். மகாத்மா காந்தி தேசபிதா என்பதால் இவ்வாக்கெடுப்பில் விடப்பட்டுள்ளார்.

## 5 அருட்சகோதரர்கள் திருத்தொண்டர்களாக திருநிலைப்படுத்தப்படுவர்

மன்னார் மறைமாவட்டத்திற்கென இவ்வாண்டு ஐந்து அருட்சகோதரர்கள் திருத்தொண்டர்களாக திருநிலைப்படுத்தப்பட உள்ளனர். எதிர்வரும் 19. 10. 2002 அன்று புனித செபஸ்ரியார் பேராலயத்தில் அமதி சபையைச் சேர்ந்த அருட்சகோதரர் சில்வேஸ்ரர் அவர்கள் குருவாக திருநிலைப்படுத்தப்படும் திருநிகழ்வின்போதே இத்திருத்தொண்டர் திருநிலைப்படுத்தல் நிகழ்வும் இடம்பெற உள்ளது.

## மன்னாரில் மௌன ஊர்வலம்

மன்னாரில் உள்ள சில கிறிஸ்தவ அடிப்படைவாத சபைகள் மன்னார் கத்தோலிக்க மக்களின் விசுவாசத்தை சீர்குலைப்பதற்கு எதிராகவும் மன்னார் ஆயர் குருக்கள் மேல் அவதூறு சுமத்துவதற்கு எதிராகவும் மன்னார் கத்தோலிக்க மக்கள் அமைதி ஊர்வலத்தை மேற்கொண்டு மகஜர் ஒன்றை மன்னார் உதவி பொலிஸ் அத்தியட்சகரிடம் கையளித்தனர். இவ்வமைதி ஊர்வலத்தில் மன்னார், பள்ளிமுனை, தாழ்வுபாடு ஆகிய பங்குகளைச் சேர்ந்த மக்கள் பங்கெடுத்தனர். மன்னார் உப்புக்குளம் சீயோன் சுவிசேச சபையினரால் 10. 09. 2002 தொடக்கம் 15.09.2002 வரை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடாத்தப்பட இருந்த நிகழ்ச்சியை தடுக்கும்படியும் அம்மகஜரில் கேட்கப்பட்டிருந்தது. இதற்கமைய இந்நிகழ்ச்சிக்கு பொலிசாரினால் அனுமதி மறுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## உலக இளைஞர் தின நிகழ்வுகளில் பங்கேற்க கனடா சென்ற மன்னார்க் குழு



கனடா ரொறன்டோவில் இடம்பெற்ற 17வது உலக இளைஞர் தின நிகழ்வில் பங்கேற்பதற்காக மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் சார்பில் சென்ற பிரதிநிதிகளே இவர்கள். படத்தில் முறையே மன்னார் பேராலய பங்கைச் சேர்ந்த செல்வன் ரூபன், மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழு உதவி இயக்குனர்களில் ஒருவரான முசெட்டிகுளம் பங்குத்தந்தை அருட்பணியாளர் ஞானப்பிரகாசம், ஆட்காட்டிவெளி பங்கைச் சேர்ந்த செல்வி மேரி அஞ்சலா ஆகியோரைப் காண்கிறீர்கள்.

(இவர்களின் பயணம் பற்றிய விரிவான தகவல்களைப் பக்கம் 10ல் காணலாம்)

## வெள்ளி விழா நாயகர்களை வாழ்த்துகிறோம்



சகோ. ஸ்ரனி



சகோ. செல்வா



சகோ. ஜெறாட்

டி லாசால் துறவற சபையைச் சேர்ந்த 3 அருட்சகோதரர்கள் இவ்வாண்டு தமது துறவற வாழ்வின் 25 வருடங்களை நிறைவு செய்து வெள்ளி விழாக் காண்கின்றனர். அருட்சகோதரர் எஸ். செல்வதாஸ், அருட்சகோதரர் ஜே. ஸ்ரனிஸ்லோஸ், அருட்சகோதரர் ஜெறாட் பாலரெட்னம் ஆகியோரே இந்த வெள்ளி விழா நாயகர்களாவர். இவர்களை மன்னார் மறைமாவட்டத்தின் ஆயர் குருக்கள் இறைமக்கள் சார்பாக மன்னா மகிழ்வோடு வாழ்த்தி நிற்கிறது.

(வெள்ளி விழா நாயகர்கள் பற்றிய விரிவான தகவல்களை அடுத்த மன்னாவில் எதிர்பாருங்கள்)

## மன்னார் மறைமாவட்ட குருக்கள் துறவியருக்கான மூன்று நாள் கருத்தமர்வு

### இந்தியாவில் இருந்து குருக்கள் வருகை

### ஒன்றிப்பு பற்றிய ஆழமான அனுபவப் பகிர்வுகள்

மன்னார் மறைமாவட்ட குருக்கள் துறவியருக்கான கருத்தமர்வு ஒன்றை இந்தியாவில் இருந்து வருகைதந்த குருக்கள் நெறிப்படுத்தினர். ஆவணி மாதம் 28 - 30ம் திகதி வரை 'ஒன்றிப்பு ஆன்மீகம்' என்னும் தலைப்பிலான கருத்தமர்வு இடம்பெற்றது. ஃபோக்கோலாரே என்ற ஆன்மீக ஒன்றிப்பு இயக்கத்தை (Focolare Movement) பற்றியும் அதன் வழியும் வாழ்வும் பற்றியதாகவும் இக்கருத்தமர்வு அமைந்திருந்தது. இக்கருத்தமர்வை நெறிப்படுத்திய குருக்கள் மற்றும் பணியாளர் தத்தமது வாழ்க்கைச் சூழ்நிலையில் இந்த ஃபோக்கோலாரே இயக்க ஆன்மீகம் எப்படி ஒற்றுமையை ஒன்றிப்பை அன்புறவை ஏற்படுத்த உதவியது என்ற தமது அனுபவங்களை கேட்போரின் இதயங்கள் தொடப்படும்படியாக பகிர்ந்துகொண்டார்கள்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

### திருமலை மட்டுநகர் மறைமாவட்டத்திற்கு

## புதிய குரு முதல்வர்

திருகோணமலை மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் புதிய குருமுதல்வராக அருட் தந்தை யு. தேவதாசன் அடிகளார் நியமனம் பெற்றுள்ளார். திருமலை மட்டுநகர் மறைமாவட்டத்தின் குரு முதல்வராக பல வருடங்கள் சிறப்புப்பணி புரிந்த அருட்தந்தை து. டிக்கோணிங் அடிகளார் ஓய்வு பெற்றதையடுத்தே இப்புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது. புதிய பணியினை மேற்கொள்ளும் குரு முதல்வர் அருட்தந்தை தேவதாசன் அடிகளாருக்கு மன்னா தன் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றது.

*"எங்கள் மீட்பராம் கடவுளே! எங்களை முன்னைய நன்னிலைக்குக் கொணர்ந்தருளும்" (தி.பாடல் 85: 4 )*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பொழிவு

# பதிப்பாசிரியர் பகர்வது

**வணக்கம்**

## சபைகளிடையே சமாதானம் வேண்டும் !

"எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக!"

"எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக!" (யோவான் 17: 21) என்பதே யேசுவின் ஏக்கம். "தந்தையே நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக! இதனால் நீரே என்னை அனுப்பினீர் என்று உலகம் நம்பும்" என்பது இயேசுவின் மன்றாட்டு.

அண்மைக் காலங்களில் மன்னாரில் கிறிஸ்தவ சபைகளிடையே கசப்புணர்வுகள் காணப்படுவது கண்கூடு. குறிப்பாக கத்தோலிக்க திருச்சபைக்கும் ஒரு சில கிறிஸ்தவ சபைகளுக்கிடையேயும் இக்கசப்புணர்வுகள் அதிகரித்து வருகின்றன. இது ஆரோக்கியமானதல்ல! முரண்பாடுகளுக்கான காரணங்கள் ஒருபுறமிருக்க - யார்சரி - யார்பிழை என்ற வாதங்கள் ஒருபுறமிருக்க இக்கசப்புணர்வுகளும் முரண்பாடுகளும் ஒற்றுமைக்காக மன்றாடிய யேசுவின் மனநிலைக்கு முரணானது என்பதை அனைவரும் தாழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு சபைகளிடையே சமாதானத்தை ஏற்படுத்த பாடுபட வேண்டும்.

### திருச்சபை வரலாற்றில் பிளவுகள்

கிறிஸ்தவ சமூகத்தில் பிளவுகள் இன்றோ நேற்றோ திடீரென ஏற்பட்டவை அல்ல. புதிய ஏற்பாட்டுக் காலத்திலிருந்தே திருச்சபையில் பிளவுகள் தோன்றியுள்ளன (காண்க 1 கொரி . 1 : 10 தொ.) காலப்போக்கில் ஆரியுஸ், நெஸ்தோரியுஸ் போன்ற சிலருடைய திரிபுக் கொள்கைகள் காரணமாகவும் பல பிளவுகள் ஏற்பட்டன. 11ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவத்தில் ஏற்பட்ட கிரேக்க சபை, உரோமை சபை எனும் பிளவு மிகப்பெரியது மட்டும் அன்று; நிரந்தரமாக இன்றுவரை நிலைப்பதும்கூட. அதுபோல் 16ஆம் நூற்றாண்டில் சமயச் சீர்திருத்தம் காரணமாக ஐரோப்பாவில் நிகழ்ந்த சீர்திருத்த சபைகளின் பிரிவும் இங்கிலாந்தில் அங்கிலிக்கச் சபையின் பிரிவும் இன்றுவரை தொடருபவை. இன்னும் பல ஆயிரம் சபைகள் தோன்றிப் பிளவுபட்டு நிற்பதே இன்றைய கிறிஸ்தவத்தின் நிலை.

### பிளவுகள் ஏற்படுத்தும் பாதிப்புக்கள்

கிறிஸ்தவத்தின் இந்தப் பிளவுபட்ட நிலை அதன் உண்மை இயல்பிற்கும் உயரிய நோக்கத்திற்கும் அனைத்திற்கும் மேலாக அதை நிறுவியவரின் விருப்பத்திற்குமே முரணானது.

உலக மக்கள் அனைவரும் ஒரே இறைத்தந்தையின் பிள்ளைகள் எனும் உண்மைக்குத் திருச்சபை அடையாளம். அவர்களை ஒரே குடும்பமாகச் சகோதர உறவுடன் வாழவைக்கும் கடவுளின் கருவி அது. இவ்வாறு மக்கள் அனைவரின் ஒற்றுமைக்கும் சகோதர உறவிற்கும் சிறந்த ஒரு சின்னமாகவும் செயல்திறமுள்ள கருவியாகவும் விளங்கவேண்டிய கிறிஸ்தவமே தன்னுள் ஒற்றுமை இன்றிப் பிளவுபட்டு இருப்பது அதன் இயல்பிற்கு எதிரானது.

மேலும் கிறிஸ்தவத்தின் பிளவுபட்ட நிலை அதன் நற்செய்தி அறிவிப்புப் பணிக்கு ஒரு பெரும் தடை. இயேசுவின் ஒரே நற்செய்தியைப் பல்வேறு சபைகளின் பணியாளர்கள் வெவ்வேறு பொருள்பட போதிப்பதும், மக்களைத் தங்கள் சபைகளிலேயே சேர அழைப்பதும், ஒருவருக்கொருவர் போட்டி மனப்பான்மையுடன் பணிகளில் ஈடுபடுவதும் இன்றும் பல இடங்களில் நாம் காணும் யதார்த்த நிகழ்வாகும். இது மக்களின் மனங்களில் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. நற்செய்தியை அவர்கள் ஆர்வத்துடனும் அக்கறையுடனும் கேட்டுக்கடைப்பிடிப்பதற்கும் தடையாக உள்ளது.

### ஒற்றுமைக்காக உழைப்போம்.

ஒற்றுமை திருச்சபையின் இன்றியமையாத ஓர் இயல்புக் கூறு. கடவுள் ஒருவரே. அவர் மகன் யேசுக்கிறிஸ்துவும் ஒருவரே. திருச்சபை ஒன்றே. அதன் நம்பிக்கை ஒன்றே. ஆனால் இன்று கிறிஸ்தவம் பிளவுபட்டு நிற்கிறது. இந்தப் பிளவுகளும் காயங்களும் புரையோடாமல் இருக்க நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். 2ம் வத்திக்கான் சங்கம் வழங்கிய 16 ஏடுகளில் கிறிஸ்தவ ஒன்றிப்பு பற்றி பேசுகின்ற ஒரு தனி ஏடே உள்ளது. கத்தோலிக்க சபைக்கும் 11ம் மற்றும் 16ம் நூற்றாண்டுகளில் பிரிந்து சென்ற பெரிய சபைகளுக்கிடையேயான (Main line Churches) ஒன்றிப்பு முயற்சிகள் பற்றி இவ்வேடு பேசினாலும் அதன் கருத்துக்களும் பரிந்துரைகளும் இன்றைய சூழ்நிலையில் நமக்கு வழிகாட்டியாக அமைகிறது. மாறிவரும் உலக சூழ்நிலையில் கத்தோலிக்க திருச்சபைக்கும் அடிப்படைவாத பெந்தகோஸ்தே சபைகளுக்குமிடையிலான ஒன்றிப்பு பற்றிய கொள்கைகளை - வழிகாட்டல்களை கத்தோலிக்க திருச்சபை வெளியிடும் காலம் அதிக தூரத்தில் இல்லை என நாம் துணிந்து கூறலாம்.


ஒருவர் மனதை மற்றவர் புண்படுத்தும் விமர்சனங்களை தவிர்ப்போம். சாதாரண நடைமுறை வாழ்வில் உறவுகளை பலப்படுத்துவோம். உரையாடல்களை மேற்கொள்வோம். ஒற்றுமைக்காக மன்றாடிய யேசுவுடன் சேர்ந்து நாமும் இறைத்தந்தையிடம் ஒற்றுமைக்காக செபிப்போம்.

மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை
அன்புடன் - அருள்பணியாளர் நேசன்.
பதிப்பாசிரியர்.




அண்மையில் உரோமில் இருந்து நாடு திரும்பிய கிறிஸ்துநாயகம் அடிகளாருடன்

# நேர்காணல்

கேள்வி : வணக்கம் தந்தையே, மன்னா வாசகர்கள் சார்பாக உங்களைச் சந்திப்பதிலே மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம். உங்களுடைய உயர் கல்வி அனுபவங்களைப் பற்றி எம்மோடு பகிர்ந்து கொள்வீர்களா?

பதில் : சந்தோசமாக பகிர்ந்துகொள்கிறேன். நான் பண்டிவிரிச்சான் பங்குத் தந்தையாக இருந்தபோது 2000ஆம் ஆண்டு ஆடி மாதம் உயர் கல்வியை மேற்கொள்வதற்காக ஆயர் அவர்களினால் உரோம் நகருக்கு அனுப்பப்பட்டேன். அங்கு 2 வருடங்கள் புனித பவுல் உயர்கல்விக் கல்லூரியில் ஒழுக்க இறையியல் தொடர்பான பாடங்களைக் கற்றேன். சென்றமாதம் அதாவது ஆவணி 20ந் திகதி இலங்கைக்கு வந்தேன்.

கேள்வி : உங்கள் உயர்கல்வி கற்கை நெறியில் எப்படியான விடயங்களைக் கற்றீர்கள்?


பதில் : வேதாகமத்தின் பின்னணியில் ஒழுக்க இறையியலை ஆராய்ந்து படித்தேன். இன்னும் சிறப்பாக இயற்கைச் சட்டம், தெய்வீக சட்டம் என்ற வரையறைக்குள் மனித வாழ்வும் அதன் பிரச்சினைகளும் எப்படி கையாளப்பட வேண்டும் என்று படித்தேன். குறிப்பாக திருமண வாழ்வு, தற்கொலை, கருச்சிதைவு, மனித உரிமைகள், போதைவஸ்துக்கு அடிமையாதல், உலகமயமாக்கல் போன்றவை தொடர்பாகவும் ஒரு செயலை சமுகவியல் ரீதியாக எவ்வாறு தீர்ப்பிடுவது சம்மந்தமாகவும் படித்தேன்.

கேள்வி : உயர்கல்வியின் நிறைவில் என்ன பட்டத்தை பெற்றீர்கள்?

பதில் : ஒ்ழுக்க இறையியலில் முதுமாணிப்பட்டத்தை பெற்றேன்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# வாசகர் எண்ணங்கள்



## முடி சூடா மன்னா

விண்ணில் வீற்றிருக்கும் மாமன்னா - அன்று
மக்கள் பசிதீர்க்க தந்தாய் ஓர் மன்னா - இன்று
எம் அறிவுப் பசிதீர்க்க தந்தாய் இம் மன்னா
அதிலே முக்கனியோடு முத்தமிழும் சேர்த்து தருவதின்னா
உன் கைதேர்ந்த கலைகளில் ஒன்னா
அதனால் தித்திப்பாய் இனிக்கிறாயே தேனா
என்று ஒரு கோடி பத்திரிகையாளர்கள் சொன்னா
மறு கோடி அதனை ஏற்றுக்கொள்ளவில்லையின்னா
அவர்களை படித்த மூடரென்பதில் தவறென்னா
கதை கட்டுரை படித்தோமின்னா
சங்கத்தமிழில் மின்னுகிறாயே பொன்னா
இல்லை அழகிய கன்னி இளம் பெண்ணா
அரசியலை சிறிது நோட்டம் விட்டோமின்னா
அதிரடியான விடயங்களை ஒவ்வொன்னா
பல இடர்களுக்கிடையில் பதில் தரும் உன் பாங்கென்னா
சிறியோர் சிந்திக்க சிரிக்க ஒரு பக்கமென்னா
ஒன்பதுக்கு மேலேயும் தரலாமின்னா
முதியோர் சற்று முகம் சுளிப்பதன் அர்த்தமென்னா
தரணியில் தமிழ் தலை நிமிர்ந்து நிற்குதின்னா
தனித்துவம் கொண்ட உன்னாலேயே முடி சூடா மன்னா

றாஜ் பெனாண்டோ, வெள்ளவத்த, கொழும்பு

(இவர் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் 1956 - 1958 வரை படித்தவர். தற்போது நோயுற்று படுக்கையில் உள்ளார். கண் அசைவு தவிர மற்ற அனைத்து உடல் இயக்கங்களும் இயங்காத நிலையில் உள்ள இவரின் பூரண சுகத்திற்காக செபிக்கும்படி மன்னா வாசகர்களைக் கேட்டு நிற்கின்றார்.)

## புலம் பெயர்ந்த வாழ்வில் மன்னா....!

பிரியமுடன் மன்னா ஆசிரியருக்கு! அன்பின் வணக்கங்கள் !

புலம்பெயர்ந்த வாழ்வில் மன்னாவின் வருகை கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். புலம் பெயர்ந்த வாழ்வில் ஆடம்பர, சுகபோக வாழ்க்கையில் உலா வருகின்ற எமக்கு மறந்து போன, மறைந்துபோன, அறியமுடியாத எத்தனையோ விடயங்களை எமது பங்குகளைப் பற்றிய, எமது மறைமாவட்டங்களைப் பற்றிய, எமது நாட்டைப் பற்றிய, எமது திருச்சபையைப் பற்றிய அனைத்து விடயங்களையும், தன்னுள் சுமந்து வந்து அதன் மூலம் எமக்கு மகிழ்ச்சியையும், எமது வாழ்வில் விழிப்புணர்ச்சியையும், நல்ல சிந்தனைகளையும் அளித்துவரும் உங்களுக்கு எனது இதயத்தின் நன்றிகள்.

மன்னாவின் வளர்ச்சிக்கு எங்கள் செபங்களும், வாழ்த்துக்களும். மாதாந்த மன்னாவை தாமதிக்காமல் அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

பிரியமுடன்.
திருமதி நெவில் டிலானி, பிரான்ஸ்.

## பல வடிவங்களில் சுவையான செய்திகள்....!

அன்பின் பதிப்பாசிரியர் அவர்கட்கு!

தைமாதம் தொட்க்கம் ஆனி மாதம் வரையிலான தங்கள் மாதாந்த வெளியீடான 'மன்னா' கிடைத்ததும் மகிழ்ச்சியடைந்தேன். தம் சொந்த மண்ணிலிருந்து புலம் பெயர்ந்து கனடா உட்பட உலகின் பல நாடுகளிலும் செறிந்து வாழும் தமிழ்க் கத்தோலிக்க மக்களுக்கு மன்னா தவறாது கிடைக்க வேண்டும் என்பது எனது ஆவல்.

மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள பெரியோர், சிறியோர் குறிப்பாக பாடசாலை மாணவர்களின் அபிமானத்தையும் ஆதரவையும் மன்னா பெற்றுள்ளது. பற்பல சுவையான செய்திகளை பற்பல வடிவத்தில் தருகிறது. அது மட்டுமல்லாமல் மன்னா மக்களிடத்தில் ஓர் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருவதை அவதானிக்கக்கூடியதாயிருக்கிறது.

மன்னார் மறை மாவட்டத்திலிருந்து பல நூற்றுக்கணக்கான தமிழ் கத்தோலிக்க மக்கள் புலம் பெயர்ந்து கனடாவில் குறிப்பாக ரொறன்ரோ மாநகரில் வாழ்கிறார்கள் என்பதை நான் அறிவேன். இவர்களும் 'மன்னா' மூலமாக சுவையான தாயகச் செய்திகள்ள அறிந்து பயனடைய வேண்டும் என விரும்புகிறேன்.

"வாழ்க 'மன்னா' வளர்க அதன் நற்பணிகள்"
என மனமார வாழ்த்தி அன்பாய் முடிக்கின்றேன்.

எல். ஆர். சேவியர், கனடா.

## பாராட்டாமல் இருக்க முடியவில்லை....!

அன்பான பதிப்பாசிரியர் அவர்களுக்கு வணக்கம்.

இந்த முறையும் ஆனி மாத மன்னா கிடைக்கப் பெற்றோம். நன்றியும் மகிழ்ச்சியும். அத்தோடு நல்ல நல்ல செய்திகளை அள்ளித்தரும் உங்களைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. இந்த முறைகூட மனப் பொழிவில் அத்தனையும் முத்துக்கள். சிறுவர் பொழிவு, பெரியப்பா பதில்கள், கவிதைகள் இன்னும் பல.... குறை சொல்வதற்கு ஒன்றும் இல்லை. பயனுள்ள செய்திகள் அத்தனையும் அள்ளிப் படைத்துள்ளீர்கள். உங்கள் பணி மென்மேலும் ஓங்கி வளர எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

சிறிதரன் குடும்பம், ஜேர்மனி.

## முப்பர் குடும்பம் ...........



**புனிதர் பொன்மொழி**

"தீமையானதை செய்யாமலிருந்தால் மட்டும் போதாது.
நன்மையானதை செய்யாமலிருப்பதும் தீமையே " புனித அத்தனாசியுஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைக்கல்வி வாரச் சிறப்பிதழ்



மன்னார் மறைமாவட்டத்தில

மறைக்கல்வி வாரம்

23 - 29 புரட்டாதி 2002



## மறைக்கல்வி என்பது கிறிஸ்துவை அறிவிக்கும் பணி

"வழியிலே அவர் நம்மோடு பேசி மறைநூலை விளக்கும்போது நம் உள்ளம் பற்றி எரியவில்லையா?" (லூாக். 24 : 32)


## மறைக்கல்வி ஞாயிறு புரட்டாதி 29

**கிறிஸ்துவை எப்போதாவது பகிர்ந்துள்ளோமா?**

*எமது இல்லத்தில் - சமூகத்தில் - பங்கில்*

*எமது உரையாடலில் - ஒன்று கூடலில் - பகிர்வில்*

*எமது தெருக்களில் - வேலைத்தளங்களில் - ஆலயங்களில்*



*"குழந்தையின் முதல் பள்ளி தாயின் மடி.*
*குழந்தையின் முதல் மறையாசிரியர் பெற்றோர்.*
*குருத்துவத்திற்கு அடுத்ததாக மிக மேலான பணியை ஆற்றுவோர் மறைக்கல்வி ஆசிரியர்களே"*

திருத்தந்தை 12ம் பத்திநாதர்

## மறைவாழ்வுப் பணியாளர்களுக்குரிய பத்துக் கட்டளைகள்

அ. வேதநாயகம் வாஸ்,
தலைமன்னார் பியர், தலைமன்னார்

**1. மாணவர்களை அறிந்துகொள்ளவேண்டும்.**
மறைவாழ்வுப் பணியாளர்கள் தம் மாணவர்களை அறிந்திருக்க வேண்டும். எப்படிப்பட்ட குடும்பச் சூழ்நிலைகளில் இருந்து மாணவர்கள் வருகின்றார்கள் போன்ற விபரங்களை தெரிந்திருக்க வேண்டும்.

**2. மாணவர்களை அன்பு செய்ய வேண்டும்.**
அன்பாகப் பழகும் ஆசிரியரை மாணவர்கள் உயர்வாக மதித்து அன்பு செய்வார்கள். மாணவர்கள் முரட்டுத்தனமான பண்பற்ற சுற்றுப்புறச் சூழலில் இருந்து வரலாம். மறைவாழ்வுப் பணியாளர்களின் அன்பான வழிநடத்தல்கள் அவர்களை மாற்றும்.

**3. யதார்த்த சூழ்நிலையை உருவாக்க வேண்டும்**
இறைப்பிரசன்னத்தை வகுப்பறையில் வெளிக்காட்ட வேண்டும். இறைவெளிப்பாட்டின் மையமான கிறீஸ்துவைப் பிரசன்னப்படுத்தி மாணவர்களுக்கு புதிய மனநிலைகளை உருவாக்க வேண்டும். இவ்வாறாக வகுப்பறையில் யதார்த்த சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

**4. காலத்தின் குறிகளைக் கவனிக்க வேண்டும்.**
வாழ்வு மைய மறைக்கல்வி முறையில் காலத்தின் அருங்குறிகளை மாணவர் மனக்கண்முன் கொண்டுவருதல் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது.

**5. வார்த்தையை மையமாகக் கொள்ள வேண்டும்.**
இறைவார்த்தையை அறிவிப்பது திருமுழுக்குப் பெற்றுள்ள ஒவ்வொருவரின் கடமையாகும். மறைக்கல்வி வகுப்பில் இறைவார்த்தையை மையமாகக்கொண்டு கற்றுக்கொடுக்க வேண்டும்.

**6. மாணவர்களை பங்கேற்கச் செய்ய வேண்டும்.**
மாணவர்களை பார்வையாளர்களாக வைத்திருக்காமல் பங்காளிகளாக மாற்ற வேண்டும். மனித மைய மறைக்கல்வியின் முக்கிய நோக்கம் மாணவர்களை பங்கேற்கச் செய்தலாகும்.

**7. வகுப்புக்கு ஆயத்தம் செய்ய வேண்டும்**
மறைக்கல்வி வகுப்புக்குச் செல்லும் முன்னர் பாடம் முழுவதையும் நன்கு படித்து ஆயத்தம் செய்ய வேண்டும்.

**8. போதிப்பதை வாழ்வாக்க வேண்டும்**
வாழ்வளிக்கும் வார்த்தைக்கு மறைவாழ்வுப் பணியாளராகிய நாம் ஒவ்வொருவரும் சாட்சிபகர வேண்டும். போதிப்பதை வாழ்வாக்க வேண்டும்.

**9. மனம் தளராமல் பணியைச் செய்ய வேண்டும்**
எந்தச் சந்தர்ப்பத்திலும் மனம் தளராமல் மறைவாழ்வுப் பணியை தொடர்ந்து ஆற்ற வேண்டும்.

**10. இறையுறவில் நாளும் வளர வேண்டும்.**
மறைவாழ்வு பணியாளர்கள் ஒவ்வொருவரும் இறையுறவில் நிலைத்து இருக்க வேண்டும். இறைவன் நம்மோடு இணையில்லா அன்புறவு கொண்டிருக்கின்றார். எனவே நாமும் அவர் உறவில் வாழ வேண்டும். "நான் உங்களோடு இணைந்து இருப்பதுபோல நீங்கள் என்னோடு இணைந்து இருங்கள்."

*வத்திக்கான் வானொலி ஒரு கத்தோலிக்க வானொலி*

## நீங்கள் வத்திக்கான் வானொலி கேட்கின்றீர்களா?

*வத்திக்கான் நகரில் இருந்து தமிழ் மொழியில் ஒலிபரப்பப்படும் கத்தோலிக்க நிகழ்ச்சிகளை கேட்கத் தவறாதீர்கள்*





1931ம் ஆண்டு வத்திக்கான் வானொலி தொடங்கப்பட்டது. அன்று தொடக்கம் இது மனித சமுதாயத்தின் மீட்பரான இயேசுக் கிறிஸ்துவின் மீதான விசுவாச ஒளியில் உலகளாவிய மனித மதிப்பீடுகளைப் பேணிக்காத்து அவற்றிற்கு விளக்கம் கொடுப்பதற்கு முயற்சித்து வருகின்றது. பரம்பரை பரம்பரையாக கிறிஸ்தவர்கள் வாழ்ந்து வருகின்ற - திருச்சபை ஆவணங்களில் தெளிவாகப் பேசப்படுகின்ற - உலக நன்னெறி மதிப்பீடுகளில் காணப்படுகின்ற இறைவெளிப்பாட்டு உண்மைகளுக்கு ஏற்ப இவ்வானொலியும் தொடர்ந்து ஒளியூட்டி வருகின்றது. சண்டை, வன்முறை, இனவெறுப்பு, பாகுபாடு, சுரண்டல், போட்டி, பொறாமை மற்றும் அநீதி ஆகியவற்றின் நம்பிக்கையற்ற சூழலில் சாதாரண மனிதனின் நம்பிக்கையை ஊட்டவும் வத்திக்கான் வானொலி முயற்சித்து வருகின்றது.

வத்திக்கான் வானொலி
தமிழ் நிகழ்ச்சிகளைக் கேழுங்கள்!
ஆக்கபூர்வமான கருத்துக்களை எழுதுங்கள்!



**நன்றி - வணக்கம்**
**இயேசுவுக்கு புகழ்!**






எங்கள் வானொலி ஒரு கத்தோலிக்க வானொலி! இயேசு கிறிஸ்துவின் வாழ்வும் போதனைகளுமே எங்கள் நிகழ்ச்சிகளுக்கு அடிப்படையாய் அமைகின்றன. இந்தியத் துணைக் கண்டத்தின் மிகப்பரந்த ஆன்மீகச் செல்வங்களால் நாங்கள் வளப்படுத்தப்படுகின்றோம். எங்கள் நேயர்கள் இதனை உணர்ந்து ஆழ்ந்த நம்பிக்கையுடன் எங்களுக்குப் பதில் செய்கிறார்கள். எங்கள் நேயர்கள் எங்களின் கண்ணாடிகள். விசுவாச அனுபவத்தின் அதிசயங்களை பொறுத்தவரையில் நாங்கள் அவர்களுடன் உரையாடல் புரிய விரும்புகின்றோம். அவர்களின் நல்லெண்ணங்களினால் தூண்டுதல் பெறுகின்றோம். அவர்களுக்கு நாங்கள் செய்வதைவிட அதிகமாகவே அவர்கள் எங்களுக்குச் செய்கிறார்கள்.

மன்னார் மறைமாவட்ட நேயர்களே உங்கள் கடிதங்களைக் கீழ்வரும் முகவரிக்கு எழுதுங்கள்.
வத்திக்கான் வானொலி,
மே/ பா. அருட்பணி. கி. அந்தோனிதாஸ் டலிமா,
அன்பியத் . தொடர்பகம்,
புனித செபஸ்ரியார் பேராலய வீதி, மன்னார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பொழிவு

## புனிதர் என்றால் யார் தெரியுமா?



அவரது நடமாட்டம் சாதாரணமானது



சவால்களுக்கு முகங்கொடுக்க தயங்கமாட்டார்

## சிறுவர் தொடர் கதை

### சிவந்த மணல் அங்கம் 2

### புனித அருளானந்தர்



5. பாதைகள் பல இருக்கலாம். ஆனால் நம் புனிதர் "முன்னோர் காட்டிய நற்பாதையிலே" நடைபயில விரும்பினார். அவருக்கு முன்பாக இயேசு சபையிலே சேர்ந்து மறைபரப்புப் பணிகளிலே ஈடுபட்ட "ராபர்ட்தே நொபிலி" (தத்துவ போதகர்) "பல்தசார் தெ கோஸ்தா" சேர்க்க ஆவல்கொண்டார். குறிப்பாக, பிராமணர் அல்லாத ஏனைய இனத்தவர், பின்தங்கிய வகுப்பினர், தாழ்த்தப்பட்டோரை மெய்மறையில் சேர்க்க உழைக்க விரும்பினார்.

6 அப்போது இந்தியாவில் மறைப்பணியாற்றிய "பண்டார சுவாமி" என்றழைக்கப்பட்ட பல்தசார் தெ கோஸ்தா என்னும் இயேசு சபைக் குரு "கோயம்பரா" என்ற நகரில் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த இயேசு சபை இளந்துறவியருக்கு தாம் இந்திய மண்ணில் ஆற்றி வரும் மறைப்பணியை எடுத்துக் கூறினார். நம் இளவல் பிரிட்டோவின் உள்ளமும் மறைப்பணி ஆற்றலால் உந்தப்பட்டு "அவர் தம் பாதையே தம் பாதையும் கூட" என்ற உள்ளுணர்வு பெற்றார்.


7. அந்த உள்ளுணர்வு "விசுவாச வாழ்வே வீர வாழ்வு: அதுவும் வேதசாட்சி வாழ்வே தாம் பெறும் பேறு" என்ற கனவாக உருவாகியது. அக்கனவு நனவாக வேண்டுமெனில் இயேசுசபைத் தலைவரின் அனுமதி வேண்டும். எனவே அப்போது உரோமையில் இயேசுசபைத் தளபதியாக இருந்த பால் ஒலிவர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். இந்திய மண்ணில் தயைகூர்ந்து தனக்கு அளிக்குமாறு மன்றாடினார். இவரது இரண்டாவது கடிதத்தைக் கண்டதும், இயேசு சபைத் தளபதி, இது உண்மையிலேயே தூய ஆவியின் தூண்டுதலால் எழுதப்பட்டது எனக் கண்டுணர்ந்து நம் இளவல் இந்திய மண்ணில் உழைக்க அனுமதி அளித்தார். கனவு நனவாயிற்று!

8. பல்தசார் அடிகளார் வேத போதக அலுவலுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுத்தபொழுது அப்பட்டியலில் முதல் இடம் பெற்றவர் நம் பிரிட்டோதான். பிறந்த பொன்னாடாம் போர்த்துக்கல்லை விட்டு. 1673ம் ஆண்டு மார்ச் மாதம் மரியன்னையின் மங்கள வார்த்தை விழாவாகிய 25ம் நாள் "காபிட்டானா" என்ற கப்பலில் லிஸ்பன் நகரிலிருந்து நம் இந்திய மண்ணில் மறைப்பணி ஆற்றிட புறப்பட்டார் நம் புனிதர். அதுவே அவர் புனிதராக மரிப்பதற்குரிய முன் அடையாளமான திருப்பயணமாக அமைந்தது. அதே ஆண்டு செப்டம்பர் மாதம் 4ம் நாள் "கோவா" நகரை அடைந்தார். அங்கே இந்திய பண்பாட்டிற்கேற்ப மேளதாளத்துடன் ஆடம்பர வரவேற்பு அவருக்கு அளிக்கப்பட்டது

(தொடரும்)

## கவிதைப் பூக்கள்









### ஆயரின் அக்கறை

தூரத்தில் சென்ற சமாதானத்தை
துரத்திப் பிடிப்போம் என்று
அயராது பாடுபட்ட
ஆயரை வாழ்த்திடுவோம்.

அன்றொருநாள் .......
ஆபத்தில் இருந்த
அடம்பன்வாழ் மக்களை
ஆலயம் நோக்கி ஓடுங்களென
அன்பாய் எமமை
அனுப்பி வைத்தார்.

அன்னையின் ஆலயம் நோக்கி
அகதியாய் நாமும் ஓடி
வந்தோம்.
அன்னையே தஞ்சம் என்று
அடைக்கலம் புகுந்தோம்.
அன்னையின் தலத்தில் - எம்மை
ஆயரே வரவேற்றார்.

ஆயரே உங்கள் சேவை
உலகெங்கும் வாழ்க! வாழ்க!
அன்போடு அன்னையிடம்
உங்களுக்காய் வேண்டுகிறேன்.
அமைதியின் காவலரே - எங்கள்
அன்பான ஆயரே
பல்லாண்டு வாழ்ந்து நீங்கள்
பணியாற்ற வேண்டுகிறேன்.

பீற்றர் திவ்வியா,
தரம் 4
ஆட்காட்டி வெளி.

### வரம் ஒன்று தா இறைவா!

அர்ப்பண பூவாக நான் வந்தேன்
ஆயிரம் தீபங்கள் ஏந்தி வந்தேன்.
இறை அன்பை உணரணும்
ஈசனின் பாதம் தொழுதிடனும்
உன் அன்பை எமக்களிக்கணும்
ஊக்கமாக என்றும் உழைத்திடனும்.
வரம் ஒன்று தா இறைவா!

என் தந்தை, தாய் மதித்திடனும்
ஏசுவின் வழியில் நடந்திடனும்
ஐயா உன் பாதம் வணங்கிடணும்
ஒற்றுமையாக வாழ்ந்திடனும்
ஓங்கும் குரலால் வாழ்த்திடனும்
வரம் ஒன்று தா இறவைா!


செல்வன் கி. ஜீசஸ் ராஜன்-
றெவல் தரம் 7, பேசாலை

### உன்னை நான் ..........

அன்பனே உன்னை நான் ஆசிக்கிறேன்
பரமனே உன்னை நான் பூசிக்கிறேன்
நாதனே உன்னை நான் நேசிக்கிறேன்
மைந்தனே உன்னை நான் யாசிக்கிறேன்

செல்வி. செ. டிலக்சனா (சுகந்தா)
தரம் 5
புனித யாகப்பர் கோவிலடி
கொக்குப்படையான்.






### செப விளக்கை ஏற்றுங்கள்....!

உங்கள் வீடு ஒரு செபவீடா? அப்படியானால் அது ஒரு பாக்கியம்! செபிக்கின்ற குடும்பம் ஜெயம் பெறும். அக்குடும்பம் குலையாது! உங்கள் குடும்பத்திலும் செபவிளக்கை ஏற்றுங்கள். உங்கள் வீட்டில் ஜெப ஓசை முழங்கட்டும். உங்கள் வீட்டில் செப சக்தி நிலவட்டும். செபத்தின் சக்தியிலே தீமைகள் அகலட்டும். பாவங்கள் குறையட்டும். பாசங்கள் வளரட்டும். நோய்கள் தீரட்டும். துன்பங்கள் ஓயட்டும். யுத்தங்கள் நீங்கட்டும். சமாதானப் பூக்கள் மலரட்டும். ஒவ்வொரு குடும்பமும் செபிக்கும் குடும்பமாக மாற ஜெப விளக்கை ஏற்றுங்கள்?

செ. அகிலன்
தரம் 2, கொக்குப்படையான், சிலாபத்துறை.

## சிரிக்க நீங்க ரெடியா?



### நானும் சொல்ல முடியும்

அமெரிக்க பிரஜை ஒருவரும், ஈராக் பிரஜை ஒருவரும் பேசிக்கொண்டிருந்தார்கள்.
"அமெரிக்கர்களாகிய எங்களுக்கு எந்தப் பயமும் இல்லை! இப்பொழுதே நான் வெள்ளை மாளிகைக்குச் செல்ல முடியும். அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷைப் பார்த்து, 'நீ ஒரு முட்டாள். பைத்தியகாரன்.' என்று நேருக்கு நேர் சொல்ல முடியும். அதற்காக யாரும் என் தலையை வெட்டிவிடமாட்டார்கள். ஈராக்கியர்களாகிய உங்களால் அப்படிச் செய்ய முடியுமா?" என்று வீராப்புப் பேசினான் அமெரிக்கன்.
"இப்பொழுதே நானும் எங்கள் நாட்டு அதிபர் சதாம் குசைன் மாளிகைக்குச் செல்ல முடியும். அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் ஒரு முட்டாள் பைத்தியக்காரன் என்று சொல்லமுடியும். எனக்கும் யாரும் ஒன்றுமே பண்ணமாட்டார்கள்" என்று நக்கலாகச் சொன்னான் ஈராக்கியன்.

### இப்பதான் விளங்குது

ஒரு முறை பாலஸ்தீனத்தைச் சுற்றிப் பார்க்க வந்த உல்லாசப் பயணியிடம் கலீலீ என்கிற ஏரியில் ஓடத்தில் செல்வதற்காக 24 டொலர் கட்டணம் செலுத்த வேண்டும் என்றார் வழிகாட்டி. "ஐயோ! ரொம்ப அதிகமாகக் கேட்கிறீர்களே" என்று பயந்தார் பயணி. உடனே வழிகாட்டி "இது உலகப்புகழ் பெற்ற ஏரி. ஏசுநாதர் இதன் மீதுதான் நடந்து சென்றார்" என்றார். அதற்கு அந்த உல்லாசப் பயணி "இப்பதான் விளங்குது... பிறகு இவ்வளவு பணம் கேட்டால் யார்தான் நடந்து போக முயற்சி செய்யமாட்டார்கள்!" என்று ஒரு போடுபோட்டார்.



"நான் புதுசா ஒரு நாய் வாங்கியிருக்கேன் வந்து பாருங்களேன்."
"அந்த நாய் கடிக்குமா?"
"அதைத் தெரிந்து கொள்ளத்தான் உங்களைக் கூப்பிடுறன்."



"வங்கியில கடன் வாங்கி கறவை மாடு வாங்கியது தப்பாப் போய்ச்சி."
"ஏன் அப்படி சொல்லுகிறாய்."
"வங்கி விடுமுறை என்றால் மாடு கறக்க மாட்டேங்குது"



நோயாளி:- ஒரு மாதமா நான் தொடர்ந்து இருமிக்கிட்டேயிருக்கேன். ஒவ்வொரு முறையும் குறிப்பெடுத்துக்கிறிங்க. என்ன வீட்டுக்குப்போக அனுமதிக்கப்போறிங்களா?
டாக்டர்:- கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் உங்களை சிபாரிசு பண்ணப் போறேன்.

***

ஒருவர்:- எவ்வளவு கஸ்டமான ஆப்ரேஷன் சக்சஷா முடிச்சிட்டிங்க! வாழ்த்துக்கள்!
டாக்டர்:- இதல்லாம் நம்ம கையிலயா இருக்கு? எல்லாம் ஆண்டவன்ரது.
வந்தவர்:- அப்ப ஆப்ரேஷன் பணத்தை உண்டியல்ல போட்டுடட்டுமா?

***

பேரன்:- பாட்டி நான் பரீட்சைக்குப் போரேன் ஆசீர்வாதம் பண்ணுங்க.
பாட்டி:- நல்லா பார்த்து எழுதிட்டு வாப்பா!

***

பக்கத்து வீட்டுக்காரன்:- உங்க பையனும் என் பையனும் சண்டை போட்டிருக்காங்க. உங்க பையனை கூப்பிடுங்க.
இவர்:- டேய் சமாதானம் இங்கே வாடா!

அனுப்பியவர்:- பெ. சுபத்திரா லியோன்
தலைமன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வு தரும் வார்த்தை

# பார்வையற்ற பர்த்திமேயு நமக்குச் சொல்லும் பாடம்

### பார்வையற்ற பர்த்திமேயு பார்வை பெறுதல் (மாற் 10: 46 - 52)

இயேசுவும் அவருடைய சீடரும் எரிக்கோவுக்கு வந்தனர். அவர்களும் திரளான மக்கள் கூட்டமும் எரிக்கோவை விட்டு வெளியே சென்றபோது திமேயுவின் மகன் பர்த்திமேயு வழியோரம் அமர்ந்திருந்தார். பார்வையற்ற அவர் பிச்சை எடுத்துக்கொண்டிருந்தார். நாசரேத்து இயேசுதாம் போகிறார் என்று அவர் கேள்விப்பட்டு "யேசுவே, தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்" என்று கத்தத் தொடங்கினார். பேசாதிருக்குமாறு பலர் அவரை அதட்டினர். ஆனால் அவர், "தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்" என்று இன்னும் உரக்கக் கத்தினார். இயேசு நின்று, "அவரைக் கூப்பிடுங்கள்" என்று கூறினார். அவர்கள் பார்வையற்ற அவரைக் கூப்பிட்டு, "துணிவுடன் எழுந்து வாரும், இயேசு உம்மைக் கூப்பிடுகிறார்" என்றார்கள். அவரும் தம் மேலுடையை எறிந்து விட்டு, குதித்தெழுந்து இயேசுவிடம் வந்தார். இயேசு அவரைப் பார்த்து, உமக்கு நான் என்ன செய்ய வேண்டும் என விரும்புகிறீர்? என்று கேட்டார். பார்வையற்றவர் அவரிடம். "ராபூனி நான் மீண்டும் பார்வை பெறவேண்டும்" என்றார். இயேசு அவரிடம் "நீர் போகலாம் உமது நம்பிக்கை உம்மை நலமாக்கிற்று" என்றார். உடனே அவர் மீண்டும் பார்வை பெற்று, அவரைப் பின்பற்றி அவருடன் வழி நடந்தார்.

ஏறக்குறைய ஒரே காலகட்டத்தைச் சேர்ந்த மூன்று நற்செய்தியாளர்களும் எழுதியுள்ள நற்செய்திப் பகுதிதான் இது.

புனித மாற்கு எழுதிய நற்செய்தியின் அடிப்படையில் இயேசு க[illegible]சியாகச் செய்த புதுமையும் இதுதான். இந்நற்செய்தி நூலில் அ[illegible]கியுள்ள புதுமைகளைப் புரட்டிப் பார்த்தால் அவை வெறும் அற்ப[illegible]ங்களாக அமையாமல் ஆழமான கருத்துடையவையாக அமைந்திருப்பதைக் காணலாம். நற்செய்தியாளர் இப்புதுமையில் பார்வையற்றவரின் பெயர் பர்த்திமேயு என்று குறிப்பிடுகின்றார். இயேசு பர்த்திமேயுவுக்குப் பார்வை அளித்து அவரைத் தம் சீடராக்குகின்றார்.



### இயேசுவின் சீடராக வேண்டுமென்றால்....!

ஒருவர் இயேசுவின் சீடராக வேண்டுமென்றால் அவர் என்ன செய்ய வேண்டும் என்பதை நாம் இந்நிகழ்ச்சியில் காணலாம். சீடராக மாறிய பர்த்திமேயுவில் காணப்பட்ட நான்கு மாற்றங்களை நற்செய்தியாளர் எடுத்துரைக்கின்றார்.

1. இயேசுவோடு நெருங்கிய தொடர்பு கொள்வதற்குமுன் அவர் வழியோரம் அமர்ந்திருக்கிறார்.

2. தன் நிலை உணர்ந்து இரக்கம் காட்டுமாறு இயேசுவை அழைக்கிறார்.

3. இயேசு அழைத்தபோது தம் மேலுடையை எறிந்து விட்டு குதித்தெழுந்து இயேசுவிடம் வருகிறார்.

4. இயேசுவோடு நெருங்கிய தொடர்பு கொண்ட பர்த்திமேயு அவரைப் பின்பற்றி அவருடன் வழிநடக்கிறார்.

### 1. வழியோரம் அமர்ந்திருந்தார்

நாம் அனைவரும் பயணம் செய்பவர்கள்தான். இயேசு நம்மை வழியில் நடக்க அழைத்துள்ளார்: "வழியும் உண்மையும் வாழ்வும் நானே, என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை" (யோவான்14:6) ஆனால் பல நேரங்களில் நாமும் நம் தலைவரின் அழைப்பை மறந்து வழியோரம் அமர்ந்துவிடுகிறோம். ஏன் தெரியுமா? இவ்வுலக சுகங்களைக் கண்டதால். இங்குதான் நாம் திருத்தூதர் பவுலைப்போல் சொல்லவேண்டும்: "என் ஆண்டவராம் கிறிஸ்து இயேசுவைப் பற்றிய அறிவைப் பெறும்பொருட்டு மற்ற எல்லாவற்றையும் குப்பையாகக் கருதுகிறேன்" (பிலி 3:8). இயேசு எழுபத்திரெண்டு சீடர்களைத் தாம் போகவிருந்த எல்லா ஊர்களுக்கும் இடங்களுக்கும் தமக்கு முன்பே அனுப்பியபோது. "வழியில் எவருக்கும் வணக்கம் செலுத்த வேண்டாம்" என்றார். உரையாடலின் தொடக்கம்தான் வணக்கம் செலுத்துதல். பின்னர் உரையாடல் வீண் பேச்சாகவும் உலக சுகங்களைப் பற்றிய கருத்துப் பரிமாற்றமுமாகவும் மாறும். அதனால் வழியில் செல்வதற்குப் பதில் வழியோரம் செல்ல நேரிடும் என்பதால்தான் ஆண்டவர் இவ்வாறு கூறினார். உலக சுகங்களைப் பற்றிய எண்ணம் நம்மைப் பற்றினால் பின்னர் அதிலிருந்து தப்புவது கடினமானது. நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஒருவரால்தான் நம்மை மீட்க இயலும். இந்த அறிவு ஒப்பற்றதாகும். இந்த அறிவுதான் பர்த்திமேயுவுக்குக் கிடைத்தது. அதனால்தான் அவர் இயேசுவைத் தேடிக்கொண்டிருந்தார். இயேசு வருவதாகக் கேள்விப்பட்டபோது அவர், "தாவீதின் மகனே, எனக்கு இரங்கும்" என்று உரக்கக் கத்தினார். பேசாதிருக்குமாறு பலர் அவரை அதட்டினர். ஏனென்றால் நாம் இயேசுவின் சீடராக வேண்டுமென்றால் நம்மிடமும் இம்மாற்றங்கள் ஏற்படவேண்டும். கிறிஸ்தவர்களைத் துன்புறுத்திய சவுல் குதிரையிலிருந்து தரையில் விழுந்தார். இயேசு கிறிஸ்துவின் அழைப்பைப் பெற்றபோது சவுல் தரையிலிருந்து எழுந்தார். தமஸ்குவுக்குச் சென்றார். அனனியா வாயிலாக ஆண்டவரின் அருளைத் துய்த்துணர்ந்து கிறிஸ்துவுக்குச் சான்று பகர்ந்தார்.

பர்த்திமேயுவும் ஒரு பயணிதான், எருசலேமுக்குச் செல்ல வேண்டியவர்தான். ஆனால் அப்பயணத்தின்போது அவர் நடப்பதற்குப் பதில் நிற்கிறார். இறைவனிடம் உதவி வேண்டுவதற்குப் பதில் மனிதரிடம் உதவி கேட்டபோது அவர் வழியிலிருந்து வழியோரம் தள்ளப்பட்டார். வழியில் நடக்க வேண்டியவர் உலக சுகங்களை நாடியதால் பிச்சைக்காரராக வழியோரம் அமர்ந்தார்.

### 2. ஆண்டவரை அழைத்தார்

வழி மறந்த குருடனைத்தான் நாம் இங்கு காண்கிறோம். அவரது சத்தம் அவர்களுக்கு தாங்க முடியாததாக இருந்தது. ஆனால் அவர் பேசாதிருக்கவில்லை. தனது துன்பங்களை ஆண்டவருக்கு சமர்ப்பிக்காமல் இருக்கவில்லை. பழைய ஏற்பாட்டில் இதைப்போல் ஆண்டவரிடம் தனது துன்பங்களை அர்ப்பணித்த ஒருவரைக் காணலாம். சாமுவேல் முதல் நூல் முதல் அதிகாரத்தில் நாம் காணும் அன்னாதான் அது. ஆண்டவர் கோவிலின் குருவான ஏலி அவரிடம், "எவ்வளவு காலம் நீ குடிகாரியாய் இருப்பாய்? மது அருந்துவதை நிறுத்து" என்றார் (1:14). குருவான ஏலிக்குக்கூட அன்னாவின் சத்தத்தைத் தாங்க முடியவில்லை. ஆனால் ஆண்டவருக்கு அது ஏற்புடையதாக இருந்தது. அதுபோல் பர்த்திமேயுவின் சத்தம் மற்றவர்களுக்குத் தாங்க முடியாததாக இருந்தாலும் ஆண்டவர் இயேசுவுக்கு ஏற்புடையதாக இருந்தது. மற்றவர்கள் நம்மை எதிர்க்கலாம், விமர்சிக்கலாம். ஆனால் நாம் தளர்ந்து விடக்கூடாது. இயேசுவை நாடவேண்டும். ஏனென்றால் அவர்தாம் "பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று கூறியுள்ளார்.

மற்றவர்கள் அதட்டினாலும் ஆண்டவர் யாரையும் அதட்டுவதில்லை. மற்றவர்கள் நம்மை வெறுத்தாலும் ஆண்டவர் நம்மை வெறுப்பதில்லை. மற்றவர்கள் நமக்கு உதவவில்லையென்றாலும் ஆண்டவர் நம்மைக் கைவிடுவதில்லை.

### 3. மேலுடையைக் களைந்தார்

இயேசு பர்த்திமேயுவை அழைத்தார். ஆனால் பர்த்திமேயுவின் அப்போதைய நிலையில் அவரால் இறைவார்த்தையை ஏற்றுக்கொள்ள முடியாது. வழியோரம் இறை வார்த்தையாம் விதை விழுந்தால் பறவைகள் வந்து அவற்றை விழுங்கிவிடும் என்பதை இயேசு அறிவார். எனவே பர்த்திமேயுவை வழியோரத்திலிருந்து நல்ல நிலத்திற்கு அழைத்து வரவேண்டும். நல்ல நிலம் என்பது இயேசுவாகிய வழியே ஆகும். அதனால்தான் இயேசு அவரைத் தம்மிடம். அதாவது வழிக்கு அழைத்தார். இயேசுவின் அழைப்பைப் பெற்றபோது பர்த்திமேயு குதித்தெழுந்தார். ஆனால் இயேசுவிடம் செல்ல அவரது மேலுடை ஒரு தடையாக இருந்தது. அவர் அனுபவித்துக்கொண்டிருந்த நிலையற்ற பாதுகாப்பு, உலக சுகங்கள் என்னும் மாயை, சுயநலம் என்னும் கடினமான மேலாடை. ஆனால் பர்த்திமேயு அந்த மேலுடையை மீண்டும் வலிந்து பற்றிக் கொண்டிராமல் அதை எறிந்தார். நாமும் அவ்வகையான மேலுடையை எறியவேண்டும்.

### 4. யேசுவைப் பின்பற்றி நடந்தார்

பார்த்தலேமேயு மேலுடையை எறிந்தபோது அவர் பார்வை பெற்றார். ஒளியான இயேசுவைக் கண்டார் - அவரைப் பின்பற்றினார் என்று நற்செய்தியாளர்கள் எழுதியுள்ளனர்.

நாமும் இயேசுவைப் பின்பற்றுபவர்கள். இயேசு என்னும் வழியில் தான் நாமும் நடக்க வேண்டும். சில நேரங்களில் நாம் வழியோரம் நிற்பதில்லையா? ஓய்வு எடுப்பதற்காக உலக சுகங்கள் என்னும் மாயையில் மயங்கி வழியோரம் அமர்வதில்லையா? அவ்வாறு பாவத்திற்கு அடிமையாகி எழமுடியாதவர்களாக நாம் போனதில்லையா? அது இயற்கையே. அது மனித பலவீனமே. வாருங்கள், நாம் இயேசுவை அழைப்போம். இயேசு நம் குரலுக்குச் செவி சாய்ப்பார். ஏனென்றால் நமது குரல் அவருக்கு ஏற்புடையது. அவர் விரும்புவது! அவருக்கு இனிமையானது! நாம் மேலுடையை எறிவோம். நிலையான ஒளியாம் இயேசுவை ஏற்றுக்கொள்வோம். இயேசுவின் சாட்சிகளாக அவரைப் பின்தொடருவோம்!

---

# அனுபவ சாட்சியங்கள்

## ஆண்டவர் அருளிய அன்புக் குழந்தை



குழந்தை தந்தை தாய்

எனது பெயர் றொபிற்றன், எனது மனைவியின் பெயர் பமிலா. நாங்கள் தலைமன்னார் கிராமத்தைச் சேர்ந்தவர்கள். எங்களுக்குத் திருமணமாகி நான்கு வருடங்களாகியும் மகப்பேற்றுப் பாக்கியமின்றி இருந்தோம். பல மருத்துவ நிபுணர்களை நாடியும் பயன்கிடைக்கவில்லை. இதனால் நாம் மிகுந்த வேதனையும் கலக்கமும் அடைந்தோம். எனது தந்தைக்கு இரண்டு ஆண் சகோதரர்கள்தான். அவர்களுக்கு மகப்பேற்றுப் பாக்கியமே இல்லை. எனது அப்பாவிற்கு மட்டும்தான் இப்பாக்கியம் கிடைத்தது. இதன் காரணத்தினால் எனக்கும் இந்நிலமை ஆகிவிடுமோ என்ற தயக்கத்தில் இருந்த காலகட்டத்தில்தான் மன்னார் மண்ணிற்கு அருட்தந்தை அகஸ்ரின் மொண்டேகாட் அவர்களும் சகோதரர் ஜோர்ச் அவர்களும் வந்து மன்னார் பேராலய வளாகத்தில் தியானம் நடத்தினார்கள். அதில் நாங்களும் எங்கள் இருவரின் குடும்பத்தினரும் கலந்து கொண்டோம். அங்கு இறைவனின் இரக்கமும் வல்லமையும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது. எம் பாவ நிலைகள், நன்றியீனச் செயல்கள் எல்லாம் உணர்த்தப்பட்டது. நாங்கள் எம் நிலை உணர்ந்து கண்ணீர் விட்டழுதோம். பின் நற்கருணை ஆசீர்வாதம் இடம் பெற்றது.

நாங்கள் மகப்பேற்றுப் பாக்கியத்திற்காகவே இறைவனின் இரக்கத்தை இறைஞ்சிக்கேட்டு செபித்துக்கொண்டிருந்தோம். அப்போது சோ என மழை பெய்தது. ஆனால் எம் அனைவரின் செப மனநிலைக்கு எந்த இடையூறும் ஏற்படவில்லை. மாறாக இறைவனின் கருணை மழைதான் எம்மேல் பொழியப்படுகின்றது என்ற உணர்வோடு உருக்கமாக மென்மேலும் செபித்து இறையாசீர் பெற்று வீடு திரும்பினோம். அம்மாதமே என் மனைவி கருவுற்றாள். பிறகு சில மாதங்களின் பின் மீண்டும் அருட்தந்தை அகஸ்ரின் மொண்டேகாட் அடிகளார் மன்னாருக்கு வந்து தியானம் நடாத்தினார்கள். அந்தத் தியானத்திற்கு நாங்கள் போகவில்லை. அந்த வேளையில் அருட்தந்தை அவர்கள் குழந்தைப் பாக்கியம் இல்லாத மூன்று பேருக்கு குழந்தைப்பேறு கி[illegible]ந்துள்ளது என்று அறிவித்தார். அந்த வேளை[illegible] அங்கிருந்த ஒரு குடும்பம் சென்று சாட்சி சொல்[illegible]. மற்றக் குடும்பம் சாட்சி சொல்லவில்லை. மீண்டும் அருட்தந்தை அவர்கள் இன்னுமொரு குடும்பத்திற்கு இப்பாக்கியம் கிடைத்துள்ளது. ஆனால் அவர்கள் தூர இடத்தைச் சேர்ந்தவர்கள். இங்கு வரவில்லை அவர்களைத் தெரிந்தவர்கள் - உறவினர்கள் யாராவது இருந்தால் வந்து சாட்சி சொல்லலாம் என்று அறிவித்தார்கள். அது எங்களைக் குறித்தே சொல்லப்பட்டது என உணர்ந்த எம் உறவினர் கை உயர்த்தி காண்பித்து அருட்தந்தை சொல்வது உண்மை என்று வெளிப்படுத்தினர்.

இப்போது எமக்கு இரண்டு வயதில் ஒரு குழந்தை இருக்கிறது. ஆண்டவரின் இரக்கம் எம்மேல் பட்டு நம்பிக்கை இழந்திருந்த எம் வாழ்வை மாற்றியது இறைவனின் இந்த மாபெரும் வல்லமையான செயலுக்காக நன்றி கூறுகிறோம்.

---

# உலக இளைஞர் தினம்



உலக இளைஞர் தின வைபவத்தில் கலந்து கொள்வதற்காக றொறன்ரோ பியன்சன் விமான நிலையத்தில் வந்திறங்கிய பாப்பரசருக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. மிகுந்த உற்சாகத்துடன் காணப்பட்ட பாப்பரசரை கனடா நாட்டின் பிரதமர் ஜீன் கிறெச்சியான் தனது பாரியார் அலைனுடன் வரவேற்றார்.

பிற்பகல் ஒரு மணியளவில் வந்திறங்கி விமானத்திலிருந்து வெளியே வந்த பாப்பரசர் அங்கு தன்னை வரவேற்கக் குழுமியிருந்தோரைப் பார்த்து முகம் மலர்ந்து கையசைத்தார். அந்நேரத்தில் பலத்த காற்று வீசி அவரது தொப்பியை பறக்க வைத்துவிட்டது. கை, கால் நடுங்கும் பாக்கின்சன்டிசீஸ் என்ற நோயினால் பீடிக்கப்பட்டுள்ள 82 வயதுடைய பாப்பரசர் அன்றைய தினம் மிகவும் உற்சாகத்துடன் காணப்பட்டார். விமானத்திலிருந்து 27 படிக[illegible]ல் தானாகவே கீழே இறங்கி வந்தார்.

பாப்பரசரைத் த[illegible]சித்த பொதுமக்கள் மகிழ்ச்சிக்களிப்பில்
ஆன[illegible]தக் கண்ணீர் சொரிந்தனர்.

### "திருத்த[illegible]யே நாங்கள் உங்களை நேசிக்கின்றோம்"

என அவர்கள் கோஷித்ததைக் கேட்டு பாப்பரசரும் கண்ணீர் மல்கினார்.
"நன்றி நன்றி. உலக இளைஞர் தினத்தை கனடாவில் நடாத்த எண்ணி அதற்கான ஒழுங்குகளைச் செய்த உங்கள் அனைவருக்கும் நன்றி"
என் பாப்பரசர் ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய இரு மொழிகளிலும் கூறினார்.

"சமாதானத்தின் வீரரே! நம்பிக்கையின் நாயகரே! தங்கள் வரவால் கனடா நாடு புனிதம் அடைந்துள்ளது. ஆன்மீகக் குறிக்கோளினை அகில உலகெல்லாம் பரப்பும் தங்களின் பணி தலையாய பணியாகும்"
வரவேற்புரையில் கனடா பிரதமர்

### இவ்வாண்டு உலக இளைஞர் தினம் பற்றிய சில சுவையான தகவல்கள்

| | | | |
|---|---|---|---|
| பாவசங்கீர்த்தனம் வழங்கிய குருக்கள் - | 2,000 | பங்கெடுத்த யாத்திரிகர்கள் - | எட்டு இலட்சம். |
| யாத்திரிகர்களுக்கு தேவைப்பட்ட வீடுகள் - | 8,000 | நற்கருணை பெற்றவர்கள் - | நான்கு இலட்சம். |
| உல்லாசப்பயண விடுதி அறைகள் - | 12,000 | நற்கருணைப் பாத்திரங்கள் - | நான்காயிரம். |
| தொண்டர்கள் - - - - - | 20,0000 | பங்கேற்ற குருக்கள் - | ஐயாயிரம். |
| அங்கவீனர்களை பராமரித்த தொண்டர்கள்- | 1,000 | பங்கேற்ற ஆயர்கள் - | ஐநூறு. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

இச்சாளரம் கலை இலக்கிய ஆர்வலர்களுக்காக திறக்கப்படுகிறது.
கலை இலக்கியச் செய்திகளையும், ஆய்வுகளையும், இன்னும் ஆக்க இலக்கியம் படைப்பது தொடர்பான வழிகாட்டல்களையும் இப்பகுதி தாங்கி வரும். ( பதிப்பாசிரியர்)

## நூல் அறிமுகம் "மர்மத்தளபதி" நாட்டுக்கூத்து



பேசாலையைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபர் எஸ். ஏ. மிராண்டா அவர்கள் "மர்மத் தளபதி" என்ற புனித செபஸ்தியார் நாட்டுக்கூத்து நாடகத்தை நூலுருவாக்கியுள்ளார். பல்கலைக்கழக பேசாலை மாணவர் அமைப்பினால் இந்நூல் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்நூலுக்கு மன்னார் ஆயர் அவர்களும் யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரீகத்துறையைச் சேர்ந்த விரிவுரையாளர் அருட்பணியாளர் விக்ரர் பிலேந்திரன் அவர்களும் பேசாலை பங்குத்தந்தை வின்சன் பற்றிக் அடிகளாரும் ஆசியுரை வழங்கியுள்ளனர். ஓய்வுபெற்ற அதிபர் திரு. ஏ. ஈ. ஏ. குலாஸ் அவர்கள் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ளார்.

ஆசிரியரை பற்றி



ஆசிரியர் எஸ்.எ. மிராண்டா அவர்கள் பேசாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆசிரியப்பணியிலும், அதிபர் சேவையிலும் அயராது உழைத்தவர். ஆக்கப்பணிகள் பல புரிந்தவர். கவர்ச்சிகரமான கற்பித்தலைப் போல கலையுலகிலும் தடம்பதித்தவர், பதிக்கின்றவர். ஓவியம் , விளையாட்டு, நாடகம், மொழி என அவர் களம் வியாபித்தது. விசாலமானது. தமிழ், ஆங்கிலம், இலத்தீன், மொழிகளில் தேர்ச்சி பெற்ற இவர் நாட்டுக்கூத்து உட்பட பல மேடை நாடகங்களையும், வானொலி நாடகங்களையும், ஆய்வுக்கட்டுரைகளையும் படைக்கின்றவர். சமூக சமய கலைவளர்ச்சியில் கரிசனை கொண்டவர்.

### தொடர் கட்டுரை – அங்கம் 1

# கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்

**– அருள்பணியாளர் விக்ரர் பிலேந்திரன் –**

## பகுதி 1 வியாகுல பிரசங்கம் – பன்முகப்பார்வையில்

### ஆசிரியர் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் (1676 ~ 1742)

வியாகுல பிரசங்கத்தை ஆக்கிய யாக்கோமே கொன்சால்வெஸ் அடிகள் 8ஆம் திகதி ஆனி மாதம் 1676ஆம் ஆண்டு இந்தியாவில் கோவா மாநிலத்தில் திவாரி என்னும் ஊரில், கொங்கொணி மொழி பேசும் பிராமணர் குலத்தில் பாரம்பரியக் கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்தார்.
இவர் சிறு வயது முதல் கல்வியிலும் கலையிலும் ஈடுபாடும், ஆற்றலும் உள்ளவராக விளங்கினார். பெற்றோர் வழங்கிய ஆழமான விசுவாச வளர்ப்பு, மதத்தின் மட்டில் இறுக்கமான பற்றும், பக்தியும் கொண்டு வளரக் காரணமாய் அமைந்தன. சங்கீதத்திலும் இசைக்கருவிகளை இயக்குவதிலும் இவருக்கிருந்த அபாரத்திறமை இவரது கல்வி வாழ்க்கையிலும், பணி வாழ்க்கையிலும் பல வகையிலும் அனுகூலமாக அமைந்தன.
ஆரம்பக் கல்வியை திவாரியிலுள்ள ஆரம்ப பாடசாலையிலும், உயர்கல்வியை கோவா புனித பவுல் பல்கலைக்கழகத்திலும் கற்று முதுகலைப் பட்டத்தையும் பெற்று இறையியல் கல்வியை புனித அக்குவினாஸ் (அக்கடமி) உயர் கல்வி நிறுவனத்தில் கற்றுத் தேர்ச்சி பெற்றார். உயர் கல்விப் பயிற்சிகளை இயேசுசபைக் குருமாரிடம் பெற்றது இவரது கல்வி, கலை வளர்ச்சிக்கும் ஆக்கச் செயற்பாடுகளுக்கும் பெரிதும் துணைபோயின. 1700ஆம் ஆண்டு பெற்றோரின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் புனிதர் பிலிப்பு நேரியாரின் தியான சம்பிரதாய சபையில் (ஓரற்ரோறியன்) இணைந்து தமது இருபத்து நான்காம் வயதிலே பணிக்குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.
இளங்குருவான இவரது வாழ்வு மடத்தில் பலருக்கும் எடுத்துக் காட்டாக அமைந்தது. ஒவ்வொரு காலையிலும் குழுச்செபத்திற்கு முன்பு தனிமையிலே நீண்ட நேரம் செபிப்பதும், திருப்பலி ஒப்புக்கொடுப்பதற்கு முன்பு பாவமன்னிப்பு ஒப்புரவு அருட்சாதனத்தைப் பெற்றுக்கொள்வதும், ஒரு வாரத்தில் நான்கு நாட்கள் நோன்பு இருப்பதும், ஞாயிறு தினங்களில் நீண்ட நேரம் செபிப்பதிலும், ஆன்மீகப் புதுப்பித்தல் தொடர்பான நூல்களை ஆழ்தியான நிலையில் வாசிப்பதிலும் செலவு செய்தார். தமக்குக் கிடைத்த ஓய்வுநேரங்களில் இறையியல் நூல்களைக் கற்பதிலும் பயனுள்ள இலக்கியங்களைப் படிப்பதிலும் கழித்தார். மடத்தில் நோன்பு, கட்டுப்பாடு நிறைந்த வாழ்வு வாழ்ந்து சபையின் ஒழுங்குகளைக் கண்ணியமாகக் கடைப்பிடித்தார்.
தாம் உயர் கல்வி பயின்ற கோவா புனித பவுல் பல்கலைக்கழகத்திலேயே மெய்யியல் துறையில் அளவையியல் பாட விரிவுரையாளராகக் கடமையாற்றினார். இவ்வாறு பணியாற்றிக் கொண்டிருக்கும்போதே இலங்கையிலிருந்து யோசேவாஸ் அடிகள் இலங்கையில் கத்தோலிக்க சமய நிலைமையை விளக்கி உதவிகோரி நான்கு குருமாரை அனுப்பும்படி சபைத் தலைவருக்கு அனுப்பியிருந்த உள்ளத்தைத்தொடும் உருக்கமான வேண்டுகோள் யாக்கோமே கொன்சால்வெஸ் காதுகளுக்கு எட்டியது. மெய்யியல் துறையில் கலைமாணி, முதுமாணிப் பட்டங்களுக்கு மாணவர்களைத் தயார் செய்வதிலும் மேலாக, கிறிஸ்துவை அறியாத, கிறிஸ்தவத்திற்காக துன்பங்களையும், பல சவால்களையும் எதிர்கொள்ளும், இலங்கையில் உள்ள கிறிஸ்தவர்கள் மத்தியில் பணி ஆற்றுவதே இறைவன் திட்டம் (சித்தம்) என அறிந்து வைகாசி மாதம் 9ஆம் திகதி இலங்கைக்கான தமது பயணத்தை ஆரம்பித்து ஆவணி மாதம் 30ஆம் திகதி இலங்கையை வந்தடைந்தார்.
கொன்சால்வெஸ் அடிகள் இலங்கைக்கான தமது பயணத்தின்போது கொச்சின் என்னும் இடத்தில் சில காலம் கழிக்க நேர்ந்தது. இவ்வேளையில் தமிழ் மொழியை ஓரளவிற்குப் பேசவும் வாசிக்கவும் எழுதவும் கற்றுக்கொண்டார். தமிழ் மொழியைக் கற்பது ஆரம்ப காலங்களில் கடினமாகத் தென்பட்டாலும் இலங்கையை அடைந்தவுடன் மொழி கற்பதற்கு காலத்தை ஒதுக்கும் தேவை இருக்கவில்லை. ஏற்கனவே கற்ற மொழி அறிவுடன் பணித்தளத்திற்கு உடனே அனுப்பப்பட்டார். யோசேவாஸ் அடிகள் இலங்கை முழுவதையும் எட்டுப் பாகங்களாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு குருவானவரை பொறுப்பாக நியமித்திருந்தார். கொன்சால்வெஸ் அடிகள் மன்னார், அரிப்பு, மாதோட்டம், முசலி ஆகிய பகுதிகளுக்கு பொறுப்பாக நியமனம் பெற்றார். எனினும் இவ்விடங்களில் பணியாற்றும் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு முன்பு ஒல்லாந்தரின் கெடுபிடிகள், நெருக்குவாரங்கள், கடும் கண்காணிப்புக்கள் மத்தியில் பணி புரியவும், ஒல்லாந்தர் கண்காணிப்பிலிருந்து தப்புவதற்கான வழி முறைகளை கற்றுக்கொள்ளும் பொருட்டும் யோசப் மெனெசெஸ் அடிகளுடன் யாழ்ப்பாணம் சென்று சில காலம் தொண்டாற்றினார்.

(அடுத்த இதழில் தொடரும்)

மன்னா சிறுகதை

# புதிய ஆரம்பம்

**- குணவதி பாலசுந்தரம்**



"என்னம்மா எப்ப பார்த்தாலும், ஞாயிற்றுக் கிழமை பூசைக்குப் போ, வெள்ளிக்கிழம கத்தர் கோவியிலுக்குப் போ, சனிக்கிழம மாதாட்டப்போ என்று ஒரே அலட்டிறிங்க..... மற்றப் பெடிகள் இப்படியா செயயினம்? ரீவி, தெருக்கூத்து எண்டு திரியினம், என்னத்தான் இப்பிடிப் போட்டுக் கஸ்ரப்படுத்திறியள்"
சீறி விழுந்தான் தாசன். "அடே தம்பி, நாம ஒரு கத்தோலிக்க குடும்பம். ஒழுக்கம், செப தவம், குடும்பச் செபமாலை என்று ஊறிப்போன குடும்பம். கோயிலுக்கு அடிக்கடி போய் ஆண்டவர்மேல் நமக்கிருக்கும் உறவை நாளாந்தம் வளர்க்கணும். வீட்டில இருந்து பைபிள் வாசிக்கணும். சும்மா உந்தப் பெடிகளோட சுத்தித்திரிகிறத விட்டிற்று, நான் சொல்லுறதைக் கேளு, வாற மாதம் மட்டில உனக்கும் ஒரு நல்ல வேலை கிடைக்கப்போகுது, எல்லாம் அந்த யேசுவின் விருப்பப்படிதான் நடக்குது" என்று தாசனின் தாய் ஆறாய்த்துக் கொண்டாள்.
தாசன் குடும்பத்தில் கடைசிப் பிள்ளை. உயர்தரப் பரீட்சையில் நாலு பாடங்களிலும் திறமைச் சித்தி பெற்று, பல்கலைக்கழகத்தில் சேர்வதற்கான இரண்டாவது விண்ணப்பமும் அனுப்பப்பட்டு விட்டது! இதற்கிடையில்தான் இடம் பெயர்வு காரணமாக வறுமை குடும்பத்தைப் பற்றிக் கொண்டது. அப்படி இருந்தும் தந்தையின் முயற்சி காரணமாக கொழும்புக் கம்பனி ஒன்றில் தாசனுக்கு "காசாளர்" பதவி கிடைத்தது. இதனால் அந்தக் குடும்பமே பெரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கியது. தாசனின் தாயும், தகப்பனும் மகனுக்கு வேலை கிடைத்ததற்கு நன்றியாக மாலை நேரங்களில் தவறாது தமது பங்கு மாதா கோவிலுக்குச் செல்லத் தவறுவது இல்லை. இப்படியாக ஆண்டவருடைய அன்பில் அவர்கள் வாழ்க்கை சந்தோசமாக ஓடிக் கொண்டிருந்தது.
தாசன் கொழும்பில் வேலை செய்யத் தொடங்கினான். காலப்போக்கில் கொழும்பு வாழ்க்கை தாசனை மாற்றி விட்டது. நண்பர்களோடு சேர்ந்து ஊதாரியாக சுற்றினான். நீலப்படங்களை பார்க்கத் தொடங்கினான். உண்மை நேர்மைக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவன் இப்போது சுத்து மாத்து செய்யக் கற்றுக்கொண்டு விட்டான். அவன் மனதில் பண ஆசை கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது! மனதில் அலகை குடியேறிவிட்டது!
ஒரு நாள் அவன் வேலை செய்யும் கம்பனியில் முகாமையாளர் இல்லாத சமயம் பார்த்து பல இலட்சக்கணக்கான பணத்தைச் சுருட்டிக்கொண்டு எதுவுமே அறியாதவன் போல வீதிவழியே வந்து கொண்டிருந்தான். அந்த வேளை சோ வென மழை பெய்துகொண்டிருந்தது. இந்த நேரத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் தனது ஜீப் வண்டியில் வந்துகொண்டிருந்தார். இந்தப் பேய் மழையில் ஒரு மனிதன் நனைந்து கொண்டு போவதைப் பார்த்த அவர் மனமிரங்கி தாசனை ஏற்றிச் செல்வதற்காக அருகில் சென்று ஜீப்பை நிறுத்தினார். ஜீப்பைக் கண்ட தாசன் தன்னைப் பிடிக்க பொலிஸ் வருவதாக நினைத்து ஓட்டம் பிடிக்கலானான். சந்தேகம் கொண்ட பொலிஸ் அதிகாரி தனது சகாக்களுடன் அவனைத் தொடர்ந்து துரத்தினார். அடர்ந்த காடுகளும், பாறாங்கல் மலைகளும் நிறைந்து காணபபட்ட அந்தப் பாதையில் அவனைப் பிடிக்க முடியாது ஏமாற்றம் அடைந்தார் பொலிஸ் அதிகாரி. குற்றப்பழி உணர்வோடும் பயப்பிராந்தியோடும் ஓட்டம் பிடித்த தாசன், ஒரு பாறாங்கல்லில் கால் தடுக்கி விழுந்தான், மயக்கமடைந்தான். பலமணி நேரங்களின் பின்னர் அவன் வைத்தியசாலைக் கட்டிலில் படுத்திருப்பதை உணர்ந்தான். சில நல்லவர்கள் அவனைக்கண்டு மனமிரங்கி அருகில் உள்ள வைத்தியசாலையில் சேர்த்துவிட்டுச் சென்றனர். கண்களை நன்றாக திறந்து பார்த்தான். நடந்ததெல்லாம் கனவா நனவா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள சில நிமிடங்கள் சென்றது. எதிரே இருந்த சிலுவையில் அறையப்பட்டிருந்த யேசுவின் உருவம், தன்னுடன் கதைப்பது போன்ற பிரமை ஏற்பட்டது. "பெரும் சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று வீட்டில் குடும்ப செபமாலையின்போது வாசிக்கக் கேட்ட அந்த இறைவார்த்தை அவன் உள்ளத்தில் நினைவுக்கு வந்தது. தன் பாவ வாழ்வை எண்ணி கண்ணீர் சிந்தினான். அந்த நேரத்திலேயே தன் வாழ்வை மாற்றிக்கொள்ள தீர்மானம் எடுத்தான்.
மறுநாள் தன் கம்பனி முகவரிடம் நடந்தவை எல்லாம் ஒழிவு மறைவின்றி சொன்னான். தான் குற்றவாளி என்றும் தன் தவறை உணர்ந்து திருந்திவிட்டதாகவும் சொன்னான். தான் களவாடிய பணத்தை மீண்டும் கம்பனி முகாமையாளரிடம் கொடுத்தான். விரும்பினால் தன்னை மன்னித்து கம்பனியில் அனுமதிக்கும்படியும் அல்லது தனக்குரிய தண்டனையை தரும்படியும் கேட்டான். அந்த கம்பனி முகாமையாளர் அவனை உற்று நோக்கினார். நானும் ஒரு கத்தோலிக்கன். ஒவ்வொரு நாளும் பைபிள் படிப்பவன். ஆண்டவரின் மன்னிக்கும் அன்பு எத்தகையது என்பதை சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம் சொல்லுபவன். நான் உன்னை மன்னிக்கிறேன் அதற்கு மேலாக ஆண்டவர் உன்னை மன்னிக்கிறார். நடந்ததையெல்லாம் மறந்து விட்டு புதிய மனிதனாக வாழ் என்று கூறி அவனைக் கட்டி அணைத்து முத்தம் கொடுத்தார். அந்த அணைப்பில் ஆண்டவரின் அன்பை தாசன் உணர்ந்தான். முகாமையாளரிடம் விடைபெற்றுக்கொண்டு அடியெடுத்து நடந்தான். அந்த அடி புதிய வாழ்வுக்கான முதலடியாக இருந்தது. அவனுடைய வாழ்வில் ஒரு புதிய ஆரம்பம் ஆரம்பமாகியது!

## ஹைக்கூ கவிதைகளை அறிமுகம் செய்கின்றோம

எழுத்தாள அன்பர்களே! குறைந்த சொற்களில் நிறைந்த அர்த்தத்தை தரும் இதுபோன்ற கவிதைகளை நீங்களும் எழுத முயற்சி செய்யுங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்.

**நட்சத்திரங்கள்**
நிலவரசியின்
அரண்மனைத்
தோழிகள்!

**கதிரை**
நான்கு
கால்களிருந்தும்
நடக்க முடியாமல்
ஊனமாகிப் போன
ஜீவன்...!

**மரணம்**
வாழ்க்கை எனும்
வாசகத்தின்
முற்றுப்புள்ளி

**சிகரட்**
உதடுகளை
முத்தமிட்டுக்கொண்டே
உயிரைக்
குடிப்பவன்...!

**சோகம்**
பெண்ணின்
கூடப்பிறந்த
சகோதரி...!

**நண்பன்**
இதயத்தின்
இன்னொரு
பாகம் ...!

**மரணம்**
வாழ்க்கைப்
பயணத்தின்
நிரந்தர தரிப்பிடம்.

**உண்டியல்**
வாயிருந்தும்
மௌனம் சாதிக்கும்
ஒரு அப்பாவி...


**துப்பாக்கி**
பல... உயிர்களை
உறிஞ்சிக்குடித்து
சந்தோஷம் காணும்
அரக்கன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பக் குவலயம்

## "காவோலை விழ குருத்தோலை சிரிக்கக்கூடாது"





ஒரு நாளின் பொழுதில் மனித உறவுகளுடன் உறவாடுவதைவிட இயந்திரங்களுடன் நாம் உறவாடும் நேரம்தான் அதிகம். இயந்திரங்களின் உறவு சமையலறையில் ஆரம்பித்து அலுவலகத்தில் தொடர்ந்து படுக்கை அறையில் முடிகிறது. காரணம் காலத்தின் வேகம் என்கிறோ[illegible]. ஆனால், ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தோமானால் வேகமான [illegible]த்தினால் எதையெல்லாம் இழந்துகொண்டு வருகிறோம் என்[illegible] உண்மை புரியும். தாத்தா, பாட்டி, பேரன், பேத்தி, அம்மா, அப்பா, பிள்ளை என்ற உறவுகள் எல்லாம் வெறும் இரத்தத்தினாலும் சதையினாலும் மட்டுமே உருவான உறவுகளா?

பாலூட்டும்போது அந்தத் தாய் தன் அன்பையெல்லாம் திரட்டியல்லவா புகட்டுகிறாள். அந்தப் புகட்டலுக்கு அர்த்தம் இல்லாமல் போகும் காலம் ஒன்று வருகிறதே! அதுதான் முதுமை! முதுமை தவிர்க்க முடியாதது. ஆனால் அது உதாசீனப்படுத்தப்படுகிறது. இளமைக்குக் கிடைக்கும் அங்கீகாரமும், வரவேற்பும் ஆர்ப்பாட்டமும் முதுமைக்குத் தரப்படாவிட்டாலும் பரவாயில்லை, அவமானப்படுத்தப்படாமல் ஒதுக்கப்படாமல் இருந்தால் போதுமே! எத்தனை வீடுகளில் வயதான பெரியவர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது? தலைமுறை இடைவெளியால் எண்ணங்களிலும் கருத்துகளிலும் கூட வேறுபாடு இருப்பது இயல்புதான். இன்றைய தலைமுறையினர் நாளைய முதியவர் ஆகும்போதும் இதே இடைவெளி ஏற்படத்தானே போகிறது! உடலால் தளர்ச்சி அடைவது இயற்கை. ஆனால், அவர்களை மனத்தளவிலும் தளர்ச்சி அடைய வைப்பது உறவுகளின் செயல்கள்தான். முதியோரிடமும் குறைகள் இல்லாமலில்லை. பிடிவாதம், தற்போதைய வாழ்க்கை முறைகளை ஏற்றுக்கொள்ள விரும்பாமை, அதனால் விரக்தி இவையெல்லாம் இந்தக் காலத்தின் வேகத்திற்கு ஈடுகொடுக்க வேண்டிய சூழ்நிலையில் நமக்கு சலிப்பை ஏற்படுத்துவது இயல்புதான். ஆனால், அவர்கள் நிலைமையை கொஞ்சம் அவர்களின் நிலையிலிருந்தே சிந்தித்துப் பார்ப்போமே! எதிர்பார்க்கப்படுவதாயிருந்தாலும் யாரும் முதுமையை வரவேற்று மனதார ஏற்றுக்கொள்வதில்லை. அதுவாகவே நம்மிடம் புகுந்து கொள்ளும் முதுமை, நம் வெறுப்பைத்தான் வாரிக் கட்டிக்கொள்கிறது. ஏற்றுக்கொண்டே ஆகவேண்டிய நிலையில் அந்த முதுமையை விரக்தியுடன்தான் ஏற்றுக்கொள்கிறோம். கூடவே சுய பச்சாத்தாபம், தாழ்வு மனப்பான்மை எல்லாவற்றிற்கும் மேலாக மரண பயம் எல்லாமும் சேர்ந்து [illegible]னசை வாட்டி வதைத்து அலைக்கழிக்கும்போது முதியோரின் தன்மைகள் மாறிப்போவது இயல்புதான். "முன்பெல்லாம் அப்பா இப்படி இல்லை. இப்பதான் இப்படியிருந்து உயிரை எடுக்கிறார்" என்று சலித்துக்கொள்[illegible] மகன் - அப்பாவின் மனநிலையைக் கொஞ்சம் [illegible]னைத்துப் பார்க்க வேண்டும். இளமையான அப்பாவிற்கும், முதுமையான அப்பாவிற்கும் இடையிலான வித்தியாசம் காலத்தின் வேறுபாடு! இயற்கையின் இயல்பு! இதை யாரால் மாற்ற முடியும்? அனுபவமிக்க முதுமையிடம் கற்றுக்கொள்ள எவ்வளவோ இருந்தும் நம்மில் எவ்வளவுபேர் பொறுமையுடன் அமர்ந்து காதுகொடுத்து கேட்க நினைக்கிறோம்? முதுமைக்கு தனிமை மிகவும் கொடுமையானது. ஆனால் வசதி படைத்த இடங்களில் என்ன நடக்கிறது? "எங்கம்மா அப்பாவிற்கு எந்தக் குறையும் இல்லாமல் வைத்து இருக்கிறோம்" என்று சொல்லும் பிள்ளைகள் பணத்தால் ஆடம்பரமாக தனி அறை, தொலைக்காட்சி, வானொலிப்பெட்டி எனச் சகல வசதிகளோடு அவர்களை தனிமைப்படுத்தி ஒதுக்கி விடுகிறார்கள். இது எப்படி இருக்குத் தெரியுமா? தங்கக் கூண்டில் கிளியை அடைத்த கதைபோல்! தனிமையைப்போல் கொடுமை அவர்களுக்கு வேறெதுவுமில்லை. உணவும் படுக்கையும் எவ்வளவு அவசியமோ அதேமாதிரி தன்னுடன் நாலு வார்த்தை பேச வேண்டும் என்று எதிர்பார்ப்பது முதுமை. அதிலும் தன் பேரன் பேத்திகளிடம் ரொம்பவே எதிர்பார்ப்பார்கள். ஆனால் இப்போதுள்ள பேரன் பேத்திகள் அவர்களை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. காலையில் பரபரப்புடன் பள்ளி! பள்ளியை விட்டால் கம்பியூட்டர் வகுப்பு, வீட்டுவேலை, விளையாட்டு, இரவு களைப்புடன் உறக்கம்..... என்று மிக இள வயதிலேயே இயந்திரத்தனமாக அவர்களது வாழ்க்கை அமைந்துவிடுவது காலத்தின் கட்டாயமாகிவிட்டது. பெற்றோர்தான் அவர்களுக்குப் பழமையின் பெருமைகளை உணர்த்த வேண்டும். தாத்தா பாட்டியிடம் அன்புடன் பழகவிட்டால் செல்லம் கொடுத்துக் கெடுத்து விடுவார்கள் என்று போலியான ஒரு வேலியை தாமே போட்டு அவர்கள் இருவருக்கிடையே பிரிவினையை ஏற்படுத்தக் கூடாது. தாத்தாவுக்கும் பேரனுக்கும் இடையில் பாலமாக அமைய வேண்டியது மகன் - மருமகள், மகள் - மருமகன் தான். அப்போதுதான் வயோதிபத்தின் சுமையும் விரக்தியும் அவர்களைப் பாதிக்காது. முதுமை ஒதுக்கப்படவேண்டியதல்ல- அது மரியாதைக்குரியது. அன்பால் அனுசரிக்கப்பட வேண்டியது. இந்த இனிய மாற்றம் இனிவரும் காலங்களில் காணப்பட வேண்டும் என்பதே எல்லா முதிய தலைமுறையினதும் எதிர் பார்ப்பு. காவோலை விழ குருத்தோலை சிரிக்கக் கூடாது என்பது முதுமொழி. ◈

## பாப்பா சண்டை போடுகிறதா...?



குழந்தைகள் அடிக்கடி சண்டை போடுவார்கள் அவற்றைத் தீர்க்க முற்படும்போது ஏற்படும் பிரச்சினைகளும் தாராளம்! உங்கள் குழந்தைகளுக்கு நல்ல பழக்கவழக்கங்களையும் பிரச்சினைகளை தாமே தீர்த்துக்கொள்ளும் மனப்பாங்கையும் வளர்த்து விடுவது அவசியம். அதற்கு உதவியாக இருக்கும் சில வழிமுறைகள்:

நீங்கள் பக்கச்சார்பற்றவர் என்பதை குழந்தைகள் உணர வேண்டும். குழந்தைகளின் சிறு சிறு சண்டைகளில் நீங்கள் தலையிடவேண்டாம். அவர்களே தமது பிரச்சினையைத் தீர்க்கட்டும். மற்றக் குழந்தைகளை அடிப்பது, உதைப்பது, கடிப்பது, தீய வார்த்தைப் பிரயோகங்கள் என்பவற்றுக்கு இடமளிக்கக் கூடாது. குழந்தைகள் எப்போதும் மற்றவர்களுடன் அன்பாக இருக்க மாட்டார்கள். அப்படி எதிர்பார்ப்பது தவறு. குழந்தைகளின் ஒவ்வொரு செயலையும் கவனமாக அவதானியுங்கள்.

குழந்தை சண்டை போடாமல் மற்றக் குழந்தைகளை சேர்த்து விளையாடும்போது அவர்களை பாராட்ட மறக்க வேண்டாம்.

குழந்தைகளிடையே ஏன் சண்டை வருகிறது என்பதை அறிந்திருங்கள். மற்றவர்களிடம் வாங்கிய புத்தகங்கள், விளையாட்டுப் பொருட்கள் என்பவற்றை மீண்டும் கவனமாகக் கையளிக்கக் குழந்தைகளுக்குப் பழக்கப்படுத்துங்கள். உங்கள் கோபத்தை குழந்தைகளிடம் காட்ட வேண்டாம்.

## நான்தான் வைத்தேன்



குழந்தை எப்படிங்க இரும்புத் துண்டை விழுங்கினான்?

குண்டூசியைத்தான் முதலில் விழுங்கினான் டொக்டர். நான்தான் அதை எடுக்க ஒரு காந்தத் துண்டை வாயில வைத்தேன். அதையும் விழுங்கிற்றான்.

## மலச்சிக்கல் தொல்லை

மலச்சிக்கலைக் கவனியாமல் விட்டால் பல தொல்லைகள் உண்டாகும். அத்தொல்லைகள் உடலுக்குக் கெடுதல் விளைவிப்பதோடு உயிருக்கும் சில சமயங்களில் ஊறு விளைவிக்கும். ஓரிரு நாள் மலச்சிக்கலினால் தொல்லைகள் ஏதும் விளைவதில்லை. பல மாதங்கள் பல ஆண்டுகள் தொடர்ந்து இருந்தால்தான் பல தொல்லைகள் விளையும். முதியவர் மலச்சிக்கலினால் அவதியுறும்போது நெஞ்சு வலியும், மயக்கமும் வரக்கூடும். குடல் இறக்கம் ஏற்படுவதோடு (Hernia) கால்களிலுள்ள குருதிக் குழாய்கள் சுருண்டு பெரியனவாகிவிடும் (Varicaeo Veins). மலம் சரிவரச் செல்லாமையால் மனத்தில் ஒரு விதச் சொல்ல முடியாத துன்பம் படபடப்பு உண்டாகும். கட்டிப்போன மலத்தினால் குதத்தில் விரிசல் ஏற்பட்டுக் குருதிக்கசிவு ஏற்படுவதுண்டு. மலம் சிறுகுடலில் தேங்கி நிற்பதால் சிறுகுடல் அடைப்பு (Intestinal Obstruction) ஏற்படலாம். மலம் பெருங்குடலில் தேங்கி முழுமையாய்ப் பெருங்குடலை அடைத்துவிடும். அவ்விடத்தில் தேங்கியுள்ள அசுத்த நீர் மட்டும் கசிந்து, கொஞ்சம் கொஞ்சமாய் வெளியேறும். அது வயிற்றுப் போக்குப் (Spunious Diarrhoea) போலக் காணப்படும்.

**சிகிச்சை முறை:**

மலச்சிக்கலுக்கு ஏதேனும் நோய் காரணமாயிருந்தால் அந்நோய்க்குரிய சிகிச்சையை முதலிற் செய்துகொள்ளவேண்டும். கீழ்க்காணும் முறைகளைக் கடைப்பிடித்தால் முதுமையில் மலச்சிக்கலைத் தவிர்க்க முடியும்.

ஒரு நாளைக்கு 10 முதல் 15 தம்ளர் (2-3லீட்டர்) தண்ணீர் குடிக்க வேண்டும். நாள்தோறும் சிறிது நேரமாவது உடற்பயிற்சி செய்ய வேண்டும். தேவையற்ற மாத்திரைகளை நிறுத்தவேண்டும். முக்கியமாய் நார்ச்சத்து அதிகமுள்ள உணவுப் பொருள்களை மிகுதியாய் உண்ணவேண்டும்.

கேழ்வரகு, கோதுமை, தினை,வரகு முதலியவை நார்ச்சத்து மிகுதியாய் உள்ள உணவுகளாகும். தவிட்டிலும் நார்ச்சத்து மிகுதி. நாள்தோறும் 2-4 கரண்டி தவிட்டைத் தண்ணீரிலோ, பாலிலோ கலந்து குடித்தால் மலச்சிக்கலை எளிதாய்த் தவிர்க்கலாம்.

கீரை, வாழைத்தண்டு, முட்டைகோஸ், காலிபிளவர், புடலங்காய், பாகற்காய் முதலிய காய்களிலும், பேரிச்சம்பழம், அத்திப்பழம், மாம்பழம், முதலிய பழங்களிலும் நார்ச்த்து மிகுதியாகவுள்ளது. வாழைப்பழம் மலச்சிக்கலுக்கு மிக நல்லது என்று எல்லோரும் எண்ணுகிறார்கள். ஆனால் அதில் நார்ச்சத்து மிகவும் குறைவு (0.45). அப்பழத்தில் மாச்சத்து மிகுதி அதுவே மலத்தைப் பருக்க வைத்து இளக்கிவிடுகிறது. மிளகு, ஓமம், கொத்தமல்லி, மிளகாய் வற்றல் போன்றவற்றில் நார்ச்சத்து மிகுதியாய் உள்ளது.

மாச்சத்துள்ள உணவுப் பொருட்களை உண்டபின் அதிகமாக நீரினைப் பருக வேண்டும். அப்பொழுதுதான் மலம் சரியாகக் கழியும். நீரைப் போதியளவிற்கு அருந்தாமல் வெறும் நார்ச்சத்துள்ள மாவினை மட்டும் உட்கொண்டால் மலம் இறுகி தொல்லை தரும். இச்சிகிச்சை முறையினை கையாளுபவர் இதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

# மருத்துவ மஞ்சரி

## நாட்டு வைத்தியர் நல்ல தம்பி



புற்றுநோய் என்றதும், செத்துப்போவதுபோல சிலர் பயந்து கொண்டிருப்பார்கள். புற்றுநோய் ஆபத்துதான். ஆனால் அதை விரட்டியடிக்க முடியும் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

புற்றுநோயின் ஆரம்ப அறிகுறி தென்பட்டுவிட்டதா? தினமும் காலை, மதியம், இரவு உணவு வேளையில் தொடர்ச்சியாக பச்சைக் காய்கறிகளைச் சாப்பிடுங்கள். காலை எழுந்தவுடன் ஏதாவது ஒரு பழரசம் அருந்துங்கள். மறவாமல் தினமும் இளநீர் பருகுங்கள். பசி ஏற்படுகின்ற நேரமெல்லாம் பச்சையாகவே உண்ணக்கூடிய பழங்கள், காய்களைச் சாப்பிடுங்கள். இப்படி 6 அல்லது 9 மாதங்கள் தொடர்ச்சியாகச் செய்துவந்தால் புற்றுநோய் வளர்வதை முற்றாகத் தடுத்துவிடலாம். இச் செயற்பாடுகளை விட்டுவிட்டுச் செய்தால் பயன்கிடையாது.

## ஆரோக்கிய குறிப்புகள்

- ❖ உடல் எடையைக் குறைக்க தினமும் காலையில் ஒரு மூடி எழுமிச்சையை எடுத்து தண்ணீரில் பிழிந்து அதனுடன் அரைக்கரண்டி தேனையும் கலந்து சாப்பிட விரைவில் பலன் கிடைக்கும்.
- ❖ தேள் கொட்டிய இடத்தில் பப்பாளிப்பால் சில சொட்டுக்கள் இட உடனே விஷம் இறங்கிவிடும்.
- ❖ வெற்றிலைச் சாற்றையும் கற்பூரவள்ளிச் சாற்றையும் எடுத்து அதனுடன் சிறிது தேனையும் சேர்த்து குடிக்க இருமல் தீரும்.
- ❖ அவரை இலைச் சா[illegible]றை தினமும் காலையில் முகத்தில் தடவிவர முகத் த[illegible]ம்புகள் மறைந்து முகம் பளபளப்படையும்.



## நரைமுடி

தலைமுடி கறுப்பாகவோ, செம்பட்டை அல்லது வேறு நிறமாகவோ இருப்பது முடியில் உள்ள மெலனின் (melanin) என்னும் ஒரு வகை சாயப்பொருளினால்தான். முதுமையில் இந்தச் சாயப்பொருளின் உற்பத்தி குறைவதாலும், முடிக்கற்றையில் நுண்ணிய காற்று கொப்பளங்கள் ஏற்படுவதனாலும் முடி வெண்ணிறமாகின்றது. நோய் அல்லது கவலை, டென்சன் போன்றவையே முடி நரைக்கக் காரணமாகும்.

## இரத்தச் சோகையால் மலட்டுத்தன்மை வருமா?

இரத்தம் உற்பத்தியாவதற்கு இரும்புச்சத்து , கல்சியம் மற்றும் பல சத்துக்கள் உணவில் இடம் பெறவேண்டும். உணவில் அல்லது உடலில் இரத்தம் உண்டாக்கும் தன்மை குறைவு அல்லது உடலில் இருந்து அதிக இரத்தப்போக்கு காரணமாக இரத்தச் சோகை ஏற்படலாம். இரத்தச் சோகையால் மலட்டுத் தன்மை வருமென்று நம்பப்பட்டாலும் மருத்துவ ரீதியாக அதற்கு எந்த ஆதாரமும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அரங்கம்

உரத்த சிந்தனை – உரைப்பது – ஸ்நாபகன்

## நன்னம்பிக்கை முனையாகியுள்ள தாய்லாந்துப் பேச்சுக்கள்

யுத்தத்தின் காரணமாக வட, கிழக்குப் பிரதேசம் உருக்குலைந்து போயுள்ளது. பிளவுபட்டு உருக்குலைந்து போயுள்ள இந்த நாட்டில் சமாதானத்தையும், அமைதியையும் அதன் வழி அபிவிருத்தியையும் ஏற்படுத்த முன்வராவிட்டால் மீட்சியே இல்லை. ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம், இதனை நன்குணர்ந்துள்ளது. இந்நிலையில் முழு மூச்சாக மேற்கொண்ட சமாதான முயற்சி புதியதொரு அரசியல் கலாச்சாரத்தை உருவாக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. சமாதானத்தைத் தேடும் பாதையில் தாய்லாந்துப் பேச்சுக்கள் நன்னம்பிக்கை முனையாகியுள்ளன. மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றனர்.

### சிங்கள இனவாதிகள் சிந்திக்கும் நேரம் இது

கடந்த காலங்களில் அரசியல் தீர்வு என ஒன்று உருவாகிய கட்டத்திலெல்லாம் - தமிழ்த் தலைமைகளுடன் இணக்கங்கள், ஒப்பந்தங்கள் ஏற்பட்டபோதெல்லாம் குறுகிய இனவாத உணர்வுகளுடனான தென்னிலங்கை இனவாத அரசியல் சக்திகள்தான் அனைத்தையும் குழப்பியடித்தன.

தமிழ் மக்களின் தேசிய சமாதான நிலைப்பாடு திம்புக் கோட்பாடுகளாக ஒரு முகப்பட்ட காலம் முதல் இன்றுவரை எத்தனையோ கசப்பான அவலமான அனுபங்களை தமிழ் மக்கள் பெற்றுள்ளனர். தென்னிலங்கை அரசியல் சக்திகள் ஆழமாக சிந்திக்க வேண்டிய நேரம் இது. ஒரு நாட்டிற்குள் சம அந்த்ஸ்துடன் தமிழர்களை வாழ அனுமதிப்பதா அல்லது தமிழர்கள் பிரிந்து சென்று தனி அரசை அமைக்க வேண்டுமா என்பதை அவர்களே சிந்திக்க வேண்டிய நேரம். தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை சிங்கள இனவாதிகள் புறந்தள்ளி குழப்புவார்களேயானால் தொடர்ந்து போராடி தமிழர்கள் தமக்கென தனியரசை அமைப்பதை விட வேறு வழி இல்லை. எனவே தென்னிலங்கை இனவாதிகள் சிந்திக்கும் நேரம் இது.

### முஸ்லிம்களின் அபிலாசைகளும் முன்னுரிமை பெறவேண்டும்


இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வுகாணும் உச்சக்கட்டத்திற்கு அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் வந்துள்ள இவ்வேளையில், வடக்கு - கிழக்கில் வாழ்கின்ற முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளையும், கவனத்திற்கொள்ள வேண்டும். இனப்பிரச்சினைத் தீர்வின்போது முஸ்லிம் மக்களின் நிலை என்ன என்பது தெளிவாக கூறப்படவேண்டுமென அம்மக்கள் கேட்பது நியாயமானதே. ஏனெனில் இலங்கை சுதந்திரம் பெற்றபோது தமிழ் மக்களின் உரிமைகள் சரியாக வரையறுக்கப்படாமையின் விளைவே இன்றைய போர். இதே நிலமை நாளை தொடரக்கூடாது. வரலாற்றில் இருந்து நாம் பாடம் கற்க வேண்டும்.

### இறுதித்தீர்வின் உள்ளடக்கத்தில் சரியான தெளிவு வேண்டும்

இடைக்கால நிருவாகத்துடன் புலிகள் இயக்கம் நின்று விடும் என்ற கருத்து தவறானது. பிரச்சினைக்கு இதுவல்ல தீர்வு. இறுதித் தீர்வு குறித்து பேசப்பட வேண்டும்.

மூன்று விடயங்களின் அடிப்படையிலேயே இந்தப் பிரச்சினையை புலிகள் இயக்கம் அணுகுகின்றது. முதலாவது தமிழ் மக்களின் தமிழ்த் தாயகம், இரண்டாவது தமிழ்த் தேசியம், மூன்றாவது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை. இந்த மூன்று விடயங்களை உள்ளடக்கியதாக இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். இதுவே தமிழ் மக்களின் அபிலாசையாகும்.

# பங்குத் தள சங்கதிகள்



### சிறுத்தோப்பில் என்றிக் எம்பரதோர் நாடகம்

பேசாலைப் பங்கு சிறுத்தோப்பு கிராம மக்களால் கடந்த ஆவணி மாதம் 19 ஆம் 20 ஆம் திகதிகளில் புனித என்றிக் எம்பரதோர் நாட்டுக்கூத்து நாடகம் இரு இரவுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக குருமுதல்வர் சேவியர் குருஸ் அடிகளார் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் அப்பங்கு மக்களும் ஏனைய அயல் பங்கு மக்களும் கலந்து கொண்டனர். பங்குத் தந்தையர்கள் வின்சன்ற் பற்றிக் அடிகளார் மற்றும் வென்சஸ்லோஸ் அடிகளார் ஆகியோர் இதை நெறிப்படுத்தினர்.

### அளவக்கையில் திருவிழாவும் முதல் நன்மையும்

கடந்த 01. 9. 2002 அன்று அளவக்கைப் பங்குத் திருவிழா சிறப்பாக இடம் பெற்றது. திருவிழாத் திருப்பலியை அருட் தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளாரும் அளவக்கைப் பங்குத் தந்தை அலெக்சாண்டர் சில்வா அடிகளாரும் நிறைவேற்றினார். திருப்பலியில் பங்குச் சிறார்களுக்கு முதன் நன்மையும் வழங்கப்பட்டது. பின்பு இளைஞர்களுக்கான விளையாட்டுப் போட்டியும் இரவு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

எஸ். யேசுதாசன். சிந்துஜா
பொன்தீவுகண்டல்.

### முள்ளிக்குளம் ஆலயத் திருவிழா

முள்ளிக்குளம் புனித பரலோக மாதா ஆலயத் திருவிழாவானது 19.08.2002 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. 21.08.2002 அன்று காலை 6.30 மணிக்கு வணக்கத்துக்குரிய குருமுதல்வர் சேவியர் குருஸ் அடிகளாரும் அவருடைய சகோதரர் வணக்கத்துக்குரிய அருட்தந்தை விக்ரர் குருஸ் அடிகளாரும் அரிப்புத்துறைப் பங்குத் தந்தை அருட்பணி. அ.யூட் குருஸ் அடிகளாரும் இணைந்து திருவிழாத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

அ. றூபா றெவல், முள்ளிக்குளம்.

### தலைமன்னார் பியரில் 15 வருடங்களுக்குப் பின்னர் ஆலயத்திருவிழா

தலைமன்னார் பியர் புனித சதாசகாய மாதா ஆலயம் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்தது. இக்காலப்பகுதியில் இங்கு வழிபாடுகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்படவில்லை. முதல் தடவையாக இவ்வாலயத் திருவிழா கடந்த 08. 09. 2002 அன்று சிறப்பாக இடம்பெற்றது. ஆலயத் திருவிழாவை சிறப்பிக்கும் முகமாக அன்றைய நாள் பேசாலை இசைக்குழுவினரால் இன்னிசை நிகழ்ச்சி இடம்பெற்றது.

கிளான்சி, தலைமன்னார் பியர்



### வரலாற்று மேற்கோள்

"அயிரிஸ் மக்கள் எதை விரும்புகிறார்கள் என்பதை அறிந்துகொள்ள நான் விரும்புகின்றபோதிலெல்லாம், நான் எனது இதயத்தையே பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டியிருந்தது. அந்த மக்கள் விரும்புவதை எனது இதயம் நேரடியாகவே எனக்குக் கூறி விடுகிறது."

ஈமொன் டி வலெரா 1922இல் ஆற்றிய உரையில் இருந்து அயர்லாந்தின் பிரதமராகவும் ஜனாதிபதியகவும் பதவி வகித்த அயிரிஸ் அரசியல் ஞானி டி பெலெரா 1975ல் காலமானார்.

# மன்னார்ச் செய்திகள்

### அனுராதபுரத்திலிருந்து கட்டுக்கரைக்குளத்துக்கு நீா

மன்னார் கட்டுக்கரைக் குளத்தை அண்டிய பகுதிகளிலுள்ள சுமார் 2 ஆயிரம் ஏக்கர் நெல் வயல்களுக்கு அனுராதபுரத்திலிருந்து நீர் திறந்துவிடப்பட்டுள்ளது. கட்டுக்கரைக் குளத்தை அண்டிய பகுதிகளிலுள்ள சுமார் 2ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை நீரின்றி அழிந்து போகும் அபாயம் ஏற்பட்டிருந்தது. இது குறித்து வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேராவிடம் முறையிட்டிருந்தார். இதனையடுத்தே அண்மையில் அனுராதபுரத்திலிருந்து கட்டுக்கரைக் குளத்துக்கு நீர் திறந்துவிடப்பட்டது.

### தலைமன்னாரில் குளிரூட்டி நிலையம்

தலைமன்னாரில் கடந்த 01.09.2002 அன்று வன்னி மாவட்ட புனர்வாழ்வு அமைச்சின் அனுசரணையுடன் மீன்களைப் பதப்படுத்தும் குளிரூட்டி நிலையம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. வன்னிப்புனர்வாழ்வு அமைச்சர் கௌரவ நூர்தீன் மசூர் அவர்ளால் இது திறந்துவைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக அரசாங்க அதிபரும். மாவட்ட செயலாளருமான திரு வி. விஸ்வலிங்கம் அவர்களும் உதவிக் கடற்றொழில் பணிப்பாளர் அல்காஜ் எம்.எஸ் தையூப் அவர்களும், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திருமதி. யோ. செல்வரத்தினம் அவர்களும் கௌரவ விருந்தினராக அருட்பணியாளர் எஸ். நேசன் அடிகளாரும் கலந்து சிறப்பித்தனர்.

தகவல் றொபின்ரா, தலைமன்னார் கிராமம்.

### மன்னார் இந்துக்கல்லூரி சிறந்த பெறுபேறு

மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி அண்மையில் வெளியான உயர்தரப் பரீட்சையில் சகல துறைகளிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று மாவட்டத்திலேயே முதன்மை பெற்றுள்ளது. மருத்துவத்துறையில் இக்கல்லூரி 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம் நிலைகளைப் பெற்று மாவட்டத்தில் முன்னிலை வகிக்கின்றது. பொறியியலில் 2ஆம், 5ஆம் நிலைகளையும் பல் மருத்துவத்தில் ஒருவரும், பௌதீக உயிரியல் பிரிவுகளில் நால்வரும், கலை வர்த்தகத்துறையில் பன்னிருவரும் நுண்கலைப்பீடத்துக்கு மூவருமாக மொத்தம் 22 மாணவர்கள் இக்கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகியுள்ளனர்.

### புத்தளம் - மன்னார் நெடுஞ்சாலையை புனரமைப்பு

புத்தளத்திலிருந்து மன்னாருக்கான நெடுஞ்சாலையை போக்குவரத்திற்காக மீண்டும் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் இணக்கம் தெரிவித்துள்ளது.

சுமார் 120 கிலோ மீற்றர் தூரமான இந்த வீதி கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக பாவிக்கப்படாதுள்ளதனால், பொதுமக்கள் அனுராதபுரம் வழியாக சுமார் 200 கிலோ மீற்றர் தூரத்தைக் கடந்து மன்னாருக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் நூர்டீன் மஷீர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மக்கள் மேடை

இந்த மக்கள் மேடை பகுதி உங்களுக்காக! உங்கள் ஊர் அல்லது

அறியும்படி உரத்துச் சொல்லும் மேடை இது. சம்மந்தப்பட்ட அதிகாரிகளின் திணைக்களங்களின் கவனத்தை ஈர்க்கும் பகுதி இது. மக்கள் மேடை பகுதிக்கான உங்கள் ஆக்கங்களை சுருக்கமாக எழுதி அனுப்புங்கள்.

பதிப்பாசிரியர்

## முருங்கனில் மக்கள் எதிர்ப்புப் பேரணி

நீண்ட காலங்களாக நானாட்டான் முருங்கன் பகுதி மக்களின் அடிப்படை அபிவிருத்தித் தேவைகள் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது. சில நாட்களுக்கு முன்பு அரச அதிபருக்கு எமது கோரிக்கைகள் பற்றி அறிவித்திருந்தோம். இந்தக் கோரிக்கைகள் சம்மந்தமாக எதுவித பதிலும் எமக்கு வழங்கப்படவில்லை.

எனவே கீழ்வரும் கோரிக்கைகளை முன் வைத்து பேரணி தொடர்ந்தது.

1. கட்டுக்கரைக் குளம் திருத்தி அமைப்பதாக வழங்கப்பட்ட வாக்குறுதி உடன் செயல்ப்படுத்தப்பட வேண்டும்.
2. முருங்கனுக்கு வழங்கப்பட்ட அம்புலன்ஸ் வண்டியை உடன் வைத்தியசாலைக்கு அனுப்ப வேண்டும.
3. முருங்கன் - சிலாவத்துறை வீதி, முருங்கன் - நானாட்டான் வீதி உடன் புனரமைக்கப்பட வேண்டும்.

இந்த எதிர்ப்பு பேரணி எந்தவிதமான வன்முறைகளும் இன்றி, வாகனங்கள் ஒரு குறிப்பிட்ட நேரமளவாக நிறுத்தப்பட்டு அனுப்பப்பட்டது. இந்தக் கோரிக்கைகள் கவனிக்கபடாமையால் இன்று பஸ் சேவைகள் இப்பகுதிக்கு நிறுத்தப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள், அரச ஊழியர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இம்முறை கட்டுக்கரை குளம் திருத்தப்படாவிட்டால் மக்கள் விவசாயம் செய்ய முடியாது. மக்கள் பெரும் அழிவுக்குள்ளாவார்கள். எனவே நீதியான இக்கோரிக்கையை ஏற்றுக்கொண்டு மன்னார் மக்களின் தேவையை பூர்த்தி செய்யுமாறு இப்பேரணி இடம் பெற்றது. நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிக்கும், அரச அதிபருக்கும் மகஜர்கள் வழங்கப்பட்டது. இப்பேரணியில் பல பொதுமக்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள். பத்திரிகையாளர்கள், மதகுருக்கள் கலந்து கொண்டனர். எமது இக்கோரிக்கைகள் மட்டில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் தலையிட்டு மக்களின் இந்த உடனடி பிரச்சினைகள தீர்த்து வைக்குமாறு அன்புடன் கோரிக்கை விடுக்கின்றோம்.

அருட்பணியாளர் பெனோ
பங்குத்தந்தை - அளவக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் பொழிவு

## தியானம் - நிதானம்



சலசலத்த ஓடையில் விம்பங்கள் தெரியாது! குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க முடியாது! அமைதியான உள்ளத்தில்தான் எண்ணங்களை ஆழப்பதிக்க முடியும். இது பற்றி இளைஞர்கள் ஆழமாக சிந்திக்க வேண்டும்! பாபா திரைப்படத்தில் ஆன்மீகத்தை விதைக்க முற்பட்ட ரஜனி அழகாக சொல்லுகிறார் "ஆறு மாதங்கள் தொடர்ந்து தியானம் செய்து பாருங்கள் அனைத்தும் உங்களுக்கு ஏற்றவாறு அமைந்து ஒழுகும்" அந்த அறிவுரை உண்மை ஒன்றை உணர்த்துகிறது. இந்து சமயமாக இருந்தால் என்ன? கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்த மதமாக இருந்தாலென்ன எல்லாவற்றிலும் பிரதானமாக இழையோடுவது தியானம்தான். "நீங்கள் எதுவாக விரும்புகிறீர்களோ! அதுவாக வருவீர்கள்" என்பது ஒரு உளவியல் விதி. அதனை மனமார விரும்ப தியானம் உதவுகிறது. உருண்டோடு வரைதான் பூமியும் நிலைக்கும். நம்பிக்கை உள்ளவரைதான் வாழ்வும் நிலைக்கும். தேருக்கு கயிறு கடலில் மிதந்து வந்தது என்றால் அதற்கு ஒரு Made in இருக்காது. போகா சாமியார் கையைச் சுழற்ற கடிகாரம் வந்தது என்றால் அதற்கும் Made in இல்லாது போகாது. இவை எல்லாம் மூட நம்பிக்கை. ஆனால் நம்பிக்கை மெய்யானது. பொய்யான உலகில் நிலைக்க நம்பிக்கை அவசியம். அதற்கு தியானம் மிக மிக அவசியம். ஒரு முறை தியானம் செய்து பாருங்கள். உலகம் உங்களுக்கு வியக்கும். அதையே பல தடவை செய்து பாருங்கள். உலகம் உங்களை வியக்கும்.

### சினிமா பற்றிய ஓர் யதார்த்த சிந்தனை!

## பாலியல் வக்கிரம், வன்முறைகளைத் தவிர தமிழ் சினிமா இன்று தருவது என்ன?



சினிமா இன்று தமிழர்களின் வாழ்க்கையில் மிகப் பெரிய பங்காகி விட்டது. எந்தவொரு விசேஷமானாலும் சினிமா இடம் பெறுகிறது. பஸ் பயணமானாலும் சினிமா! ஒலி ஒளி நாடா என்றாலும் சினிமா! தொலைக்காட்சி என்றால் சினிமாவை நம்பி ஆரம்பிக்கப்பட்டதுபோல் பலப்பல சினிமா நிகழ்ச்சிகள்! பள்ளி, கல்லூரி விழாக்கள் என்றால் சினிமா! பத்திரிகைகள் சினிமாவைத் தூக்கிச் சுமக்கின்றன. தமிழர் ஒருவர் சினிமாவைத் தவிர்த்து வாழ்வது இயலாத ஒன்று என்கிற நிலையாகி விட்டது.

அண்மையில் நான் ஓர் ஆய்வுக்காக, தமிழ் நாட்டில் ஏழு மாவட்டங்களுக்குப் போக வேண்டியிருந்தது: குறிப்பாகக் கிராமங்களில் மக்கள் வாழும் வாழ்க்கை பேரதிர்ச்சியாக இருந்தது. நமது கலைகள் மறைந்து வருகின்றன. மாறாக எதற்கெடுத்தாலும் சினிமாதான். கோயில் திருவிழாக்களில் ஒளிப்பதிவு, பாட்டுக் கச்சேரிகள் சகஜமாகிவிட்டன. சினிமா, அரசியலைத் தவிர வேறு எதைப் பற்றியும் தமிழர்களிடம் பேச முடியாதோ என்கிற சூழல் உருவாகியுள்ளது. கிராம இளைஞர்கள் தங்களின் பிரச்சினைகளை விட்டு விட்டு ரசிகர் மன்றங்களில் மூழ்கிக்கிடக்கிறார்கள். பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் நேரம் என்கிற பிரச்சினையே இல்லாமல் புதிதாக வந்த சினிமாவைப் பார்ப்பதில் செலவழிக்கும் காலம் வேறு எதையும்விடக் கூடுதலாக இருக்கின்றது. அவர்களுக்கு சினிமாவே உலகமாக இருக்கிறது. தமது அபிமான சினிமா நாயக - நாயகிகளைப் பற்றிய சிறு விமர்சனத்தைக் கூட அவர்களால் ஏற்க முடியவில்லை. இரசிகர்களுக்குள் ஏகப்பட்ட சண்டைகள்! இப்படியான வாழ்க்கைப் பயணம் இளைஞர்களுக்கு எதைத் தந்துள்ளது? அறிவையா? வாழ்க்கை பற்றிய விசாலமான பார்வையையா? சமூக சிந்தனையையா? பாலியல் வக்கிரங்களையும், வன்முறைகளையும் தவிர தமிழ் சினிமா இன்று எதைத் தருகிறது? இதற்கு ஒரு சமூகமே பலியாகி வருகிறது.

தங்களது வாழ்க்கை ஏன் சீரழிந்து கொண்டிருக்கிறது? என்ன செய்துகொண்டிருக்கிறோம்? என்ன செய்யப் போகிறோம்? என்றே இளம் தலைமுறை நினைப்பதில்லை. சிந்தனை, பகுத்தறிவு, நல்ல பண்புகள், ஒழுக்கம் எல்லாம் தீய வார்த்தைகளாகி வருகின்றன. எதிலும் ஒரு முரட்டுத்தனம், பிறர் பற்றிய அக்கறையின்மை, எந்தப் பெண்ணையும் பாலியல் பார்வையில் பார்ப்பது முற்றிப்போயுள்ளது. அதனால், சிறு சந்தர்ப்பத்திலும் மனதில் இருக்கும் வக்கிரத்தையோ, வன்முறையையோ செயல் முறைப்படுத்தி வருகின்றனர். இதில் கிராமத்து படிப்பற்ற இளைஞன், பள்ளிக் கல்லூரி மாணவன், அலுவலர், அரசியல்வாதி என்ற பேதமில்லை.

தமிழர்கள் பலரிடமும் அழிவைத் தரும் தன்முனைப்பு, பொறாமை வளர்ந்து கிடக்கின்றன. ஒரு பஸ்ஸில் ஏறும்போது, நிற்கும்போது, வரிசையில் காத்திருக்கும்போது, பேசும்போது என்று...... பல சந்தர்ப்பங்களில் சிறு சிறு விஷயத்திற்காகக்கூட சண்டைகள் நடக்கின்றன. எதையும் சகிக்கவோ மன்னிக்கவோ தயாரில்லை. இது சினிமாவின் - அரசியலின் பாதிப்புத் தவிர வேறென்ன? இந்தச் சூழ்நிலையில் கிராமத்துப் பெண்களின் நிலை பல வகைகளிலும் நரகமாகி வருகிறது.

இளம் பெண்களை ஆபாச உடைகளில் தூக்கி இம்சை செய்யும் காட்சிகள் மக்களைப் பாதிக்குமென தமிழ், தமிழர் என்று அரிதாய்ப் பேசும் நடிகர்கள்கூட நினைக்கவில்லை. சமீபத்தில் மலேசியாவில் நடந்த கலை நிகழ்ச்சியின்போது மிக அருகில் இருந்து நடிகர், நடிகைகளின் பேச்சுக்கள், செயல்களை எல்லாம் அறிய முடிந்தது. அதிர்ச்சிதான் ஏற்பட்டது.

நடிகர்களின் படங்களுக்கு பாலாபிஷேகம் செய்வது, நடிகைகளுக்கு கோவில் கட்டுவது, ரசிகர்களுக்குள் மோதல்கள் ஏற்படுவது, ஒரு பெரும் இளைஞர் பட்டாளம் சினிமாவில் மூழ்கி தவறான பாதைகளில் நடப்பது, இப்படி, இன்னும் இன்னும்...24 மணி நேர தமிழர் வாழ்க்கை...... எங்கோ போய்க்கொண்டிருக்கிறது.

இவை பற்றிப் பேசப்பட வேண்டும். தமிழ் சினிமா விமர்சிக்கப்பட வேண்டும். ஆராயப்பட வேண்டும். சினிமாத் தொழில்நுட்பங்கள் பற்றியும் நடிகர் நடிகைகளின் பங்களிப்பு பற்றியும் தெளிவு ஏற்பட வேண்டும். எதையும் உணர்ச்சிமயமாய்ப் பார்த்து, அதை அப்படியே ஏற்கும் தமிழர்களுக்கு இன்றைய சினிமாவின் கதைகள், காட்சிகள், ஆட்டங்கள் எதைத் தர முடியும்? எப்படித் தமிழர்கள் உயர முடியும.

(செ. கந்தசாமி - நன்றி - தினமணி)

# கவிதைக் களம்

## நீ என்னைப் பிரிந்தபோது....!

உன்னைப் பார்க்கிறபோது
என் வாழ்கையில் எனக்கு
நம்பிக்கை இருந்தது.
ஆனால் அன்றொரு நாள்
நீ என்னைப் பிரிந்தபோது
நானே என்னைப் பிரிந்து விட்டேன்.

எங்கெல்லாம் நான் சென்றேனோ
அங்கெல்லாம் நீ என்னோடு இருந்தாய்.
அதனால் என் தொலைதூர பயணம்கூட
சுகமாய் இருந்தது.
என் ஒவ்வொரு நடவடிக்கையும்
உன் முகம் பார்த்தபின்தான் நடந்தேறும்.
நீ இல்லாத ஒரு நிமிடம்கூட
பல யுகங்களாகத் தோன்றும்.
சொந்த நாட்டில் இருந்தபோது
எனக்கு நானே அன்னியன் ஆனேன்.
உன்னை இழந்தபின் என் உயிருக்கு
உத்தரவாதம் இல்லாமல் போனது.

என் பார்வை உன்மேல் படும்போது
என்னை நீ பார்க்கும் என் பிரியமான
அடையாள அட்டையே
என் உயிர் பிரிவதற்குள் வந்துவிடு!

த. தவறஞ்சன்,
அச்சங்குளம், நானாட்டான்.

## நான் ஓர் முதிர் கன்னி

என்
பள்ளிப் பருவமும்
மெல்லவே என்னிடம்
சொல்லாமல் மறைந்தது.
எனக்கோ இது
கலியாண வயது!

ஊரோடு
உத்தியோக மாப்பிள்ளை
பார்க்க புறப்பட்டார்
என் தகப்பனார்.
தரகரிடம் அகப்படவில்லை!
இப்போது எனக்கோ வயது
இருபத்து ஏழு!

உத்தியோகம் வேண்டாம்
ஊரோடு நல்ல
உழைப்பாளி போதும்
ஊருராய் திரிந்தார்.
சரிவரவில்லை
இப்போது எனக்கோ வயது
முப்பத்து மூன்று!

வெளிநாடெனினும்
பரவாயில்லை என்றார்
லண்டன், கனடா
அமெரிக்க மாப்பிள்ளை
படங்கள் பறந்தே வந்தன.
அவர்களது விலை
கொஞ்சம் ஜாஸ்தி!
அதனால் நான்
விலை போகவில்லை.
தற்போது
எனக்கோ வயது நாற்பது!

கற்பில் களங்கமில்லை.
ஆனால் தோற்றத்தில்
சிறிய மாற்றம்!
கண்ணாடி பார்த்தேன்
முகத்தில்
சில கருமைகள்
ஆங்காங்கே
சில நரைகள்
எனக்கோ........
வயதாகி விட்டது
என்ற உணர்வு!

திருமணம் எனக்கோர்
பகல் கனவு
கனவில் மட்டும்
நான்
குடும்பப் பெண்!

கண்விழித்துக் கொண்டால்
நானோ கன்னிப் பெண்!

கனவில் மட்டும்
என் கணவன்
என்னிடம்
வந்து செல்வான்
அதனால்
தினமும் எனக்கு
திருமணம் இரவில்!
என்னையே
கேட்டுக்கொள்வேன்

"என்ன இது
திருட்டுத் திருமணமா
இருட்டில் நடக்க ...?"
இருந்தும்
கனவுகளைக்
கலைத்துவிட
நான் விரும்புவதில்லை!

வீட்டிற்கு
நான் ஓர் சுமை!
ஊருக்கோ விலைபோகா
பழஞ்சரக்கு!

பெயருக்கு மாத்திரம்
நான் ஓர் பெண்!
யாருக்குத் தெரியும்
என் மனப் புண்!

எனக்குள்ளும்
ஒரு எரிமலை
தினமும் கொதிக்கிறேன்
ஆனால் வெடிப்பதில்லை
வெந்து போகிறேன்.......!

என்னைப் பற்றி
சல்லாபிக்கும்
என் சமூகமே
சீதனம் என்னும்
சாக்கடையை
நீ சீர்படுத்து.
படித்தவருக்கும்
பணம் படைத்தவருக்கும்
தாலிகட்டத் துடிக்கும்
ஆடவருக்கு
அறிவுரை சொல்!
வெளிநாட்டு மணமக்களுக்கு
எங்கள் ஊர்நிலை சொல்லு.
தங்கள்
கற்பனை மருமக்களை
தேடி அலையும் எங்கள்
பெற்றோருக்கு எம்
உணர்வுகளை
உரைத்துவிடு!
ஏனெனில் நாங்களும்
வாழ வேண்டும் .........!

தே. றவிறாஜ்







## வகை தெரியாதா?

எங்கள் படுகுகள்
பாடைகள் ஆகின்றன.
எங்கள் சவக்குழிகளில்
எறிகணைகள் பூக்கின்றன

ஓ - தள்ளாடி அந்தோனியே
நீயும் மண் மூடைகளுக்கு
நடுவிலா......

தலை சொறிந்து
சலித்துப் போனோம்,
கைகள் உயர்த்தி
களைத்துப் போனோம்

இந்த வட்டங்கள் நீங்க
வகை உனக்கும்
தெரியாதா?

மெலிஞ்சிமுத்தன்
அரிப்பு, முருங்கன்.

## எழுந்து வா நண்பா

கல்வித் தோல்விக்காய்
கலங்கிப் போகிறாய்.
சோகங்களில் முகம் புதைத்து
சோர்ந்து கிடக்கிறாய்.
ஏன் இறைவனில்
நம்பிக்கை இல்லையா?
புதுயுகம் படைக்க
விழிநீர் துடைத்து
இறைவார்த்தைக்கு செவிமடுக்க
எழுந்து வா நண்பா.

முயற்சிகள் தோற்று விட்டதாய்
துயரம் கொள்கிறாய்.
மது போதையில் மூழ்கிப்போய்
உன் வாழ்வை நீயே
அழித்துக் கொள்கிறாய்.
வேண்டாம் நண்பா வேண்டாம்!

சீர்கெட்டுக் கிடக்கும்
சமுதாயத்தை சீராக்க
உனக்கு விசுவாசம் வேண்டும்.
இறைவன் உனது வானகத்தந்தை
என்பதை உணர்ந்து செயற்படு.
இறைவார்த்தையினை
உள்ளத்தில் தாங்கு.
"இறைவா என் உள்ளம் வா"
என்று செபம் செய்.

முடங்கிப்போன சமுதாயத்தை
தூக்கிவிட வா நண்பா!
உன் விசுவாசம் உன்னை
வெற்றியடையச் செய்யும்.
விசுவாசம் இருந்தால்
வெற்றி பெறலாம்.
கலங்காதே என் நண்பா
வேதாகமத்தை கையில் ஏந்தி
இறையரசைப் பரப்பிடவே
புறப்படுவோம் வா நண்பா!

அன்ரனீஸ் மேரி குரூஸ்
தலைமன்னார் மேற்கு
தலைமன்னார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியப்பா பதில்கள்

ஒவ்வொரு மன்னாவிலும் பிரசுரிக்கப்படும் கேள்விகளில் அறிவு சார்ந்த ஆக்கபூர்வமான பயனுள்ள கேள்வி ஒன்று பாராட்டுக்குரிய கேள்வியாகத் தெரிவுசெய்யப்படும். எங்கே உங்கள் கேள்விக்கணைகளை அனுப்புங்கள்!

(பதிப்பாசிரியர்)

கே. பெரியப்பா .! கொஞ்ச நாளா சமையல் செய்வது போல எனக்கு அடிக்கடி கனவு வருகிறதே?

*ச. பால முரளி, பரப்புக்கடந்தான்.*

ப. கையைக் கொடுங்கள் "அட்வான்ஸ்" திருமண வாழ்த்துக்கள்.


கே. திருப்பலியில் பதிலுரைப் பாடல் பாடவேண்டிய சமயத்தில் புதுப்புது பாடல்களை அரங்கேற்றுகிறார்களே! சரியானதா?

*றிளோகா, கோமரசன் குளம், வவுனியா.*

ப. சரியில்லை! நமது பங்குப் பாடகர் குழாமினரில் பலர் இன்னும் பக்குவப்படவில்லை. விசுவாச வளர்ச்சியில் முதிர்ச்சி ஏற்படும்போது - இறைவார்த்தையின் வல்லமை தெரியவரும்போது பதிலுரைப்பாடல் வாசிப்பது எவ்வளவு பயன்தரும் என்பதைப் புரிந்து கொள்வார்கள். அதுவரைக்கும் சும்மா சும்மா........ புதுப்பாடல்களை சும்மா சும்மா ..... பாடிக்கொண்டேயிருப்பார்கள்!

■ கே. மல்லிகைப்பூ, மரத்தில் இருந்தால் அழகா மங்கையின் கூந்தலில் இருந்தால் அழகா?

*அழகக்கோன், அளவக்கை, முருங்கன்.*



ப. திருமணம் முடித்தபின்னர் பெண் பிறந்த வீட்டில் இருப்பது அழகா, புகுந்த வீட்டில் இருப்பது அழகா?

கே. பெரியப்பா சில ஆலயங்களில் வழிபாட்டுப் பொறுப்புகளை தாங்களும் செய்ய மாட்டார்கள்! மற்றவர்களையும் செய்ய விடமாட்டார்கள். இப்படி உள்ளவர்களை எப்படிச் சொல்லலாம்! எப்படி மாற்றலாம்? நல்ல பதில் சொல்லவும்?

*அருள் ராணி, இலுப்பைக்கடவை.*

ப. இப்படிப் பட்டவர்களைத்தான் "வைக்கல் பட்டறை நாய்கள்" என்று நம்ம ஊரில் சொல்லுவார்கள்.....!
அவர்களை கணக்கில் எடுக்காதீர்கள்.......! நீங்கள் உங்கள் பொறுப்புக்களை உண்மையோடும் நேர்மையோடும செய்யுங்கள். ஆண்டவர் உங்களை அறிவார். அயலவர்கள் விரைவில் உங்களை அடையாளம் காண்பார்கள்.

கே. பெரியப்பா, ஆயுதமேந்திப் போராடும் பெண்கள் பற்றிய உங்கள் கருத்து என்ன?

*மேரிசாந்தினி, மட்டக்களப்பு*

ப. புயலான பூக்கள்.

கே. பாதைகள் யாவும் பலன்தருவனவா?

*றொபட் சாந்த லூசியா, பியர், தலைமன்னார்.*

ப. சரியான பாதைகள் மட்டுமே சரியான பலன் தரும்.

கே. பறக்கும் தட்டு இப்போதும் இருக்கிறதா?

*மோகனி, மன்னார்*

ப. திருமணமான பின்பு பறக்கும் தட்டின் அனுபவம் ஏற்படும்!

கே. இவ்வருடம் மாதாவின் பிறந்த நாள் - அதாவது புரட்டாசி 8ந் திகதி திருநாள் கொண்டாடப்பட மாட்டாதென விவிலிய நாட்காட்டியில் குறிப்பிடப்பட்டிருந்தது, அதற்கான காரணம் என்ன என்பதை அறியத்தாருங்கள்?

*அ. மரிய குமாரி, விடத்தல் தீவு.*

ப. ஞாயிறு தினம் கடன் திருநாள்! பெருவிழா! - உயிர்த்த ஆண்டவருக்குரிய நாள்! அந்தக் கடன் திருநாளில் - கடன் திருநாள் இல்லாத திருநாட்கள் கொண்டாடப்படுவதில்லை. என்பது திருச்சபையின் வழிபாடு தொடர்பான அறிவுறுத்தல்.

கே. காதலினால் இளைஞர்கள் பாதிப்படைகின்றார்களா? அல்லது பக்குவப்படுகிறார்களா?

*அ. நியூட்டன் கூஞ்ஞ, ப. கொட்டு, மன்னார்.*

பாதிப்படைகின்றவர்கள் பாதிப்பேர். பக்குவப்படுகின்றவர்கள் மீதிப்பேர்.

■ இந்த அடையாளமிடப்பட்ட கேள்வி பாராட்டுக்குரியதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

உலக இளைஞர் தின நிகழ்வுகளில் பங்கேற்க

# கனடா சென்ற மன்னார்க் குழு

கனடா ரொறன்டோவில் இடம் பெற்ற 17வது உலக இளைஞர் தின நிகழ்வில் பங்கேற்பதற்காக மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் சார்பில் மன்னார் பேராலய பங்கைச் சேர்ந்த செல்வன் ரூபன், ஆட்காட்டிவெளி பங்கைச் சேர்ந்த செல்வி மேரி அஞ்சலா ஆகியோர் கனடாவுக்கு பயணத்தை மேற்கொண்டிருந்தனர். இவர்களோடு மன்னார் மறைமாவட்ட இளைஞர் ஆணைக்குழு இயக்குனர் சார்பாக உதவி இயக்குனர்களில் ஒருவரான செட்டிகுள பங்குத்தந்தை அருட்பணியாளர் ஞானப்பிரகாசம் அவர்களும் கனடா சென்றிருந்தார்.
மன்னாரில் இருந்து பயணத்தை மேற்கொண்ட பிரதிநிதிகள் தம்மை வரவேற்று உபசரித்த ரொறன்டோ சகாய மாதா ஆலய மக்களுக்கு ஆறடி உயரமுள்ள இரண்டு குத்து விளக்குகளை அன்பளிப்பு செய்தனர். மன்னார் ஆயர் அவர்கள் இக்குத்துவிளக்குகளை இவர்களுக்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





"இலங்கையில் இருந்து சென்ற தமிழ் இளைஞர் யுவதிகளை ரொறன்டோவில் உள்ள சகாய மாதா பங்கைச் சேர்ந்த புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் அன்போடு வரவேற்று உபசரித்தார்கள்"
- செல்வன் ரூபன்

## இலங்கையிலிருந்து 13 இளைஞர் பிரதிநிதிகள்

தேசிய கத்தோலிக்க இளைஞர் விவகாரங்களுக்கு பொறுப்பாக இருக்கும் அருட்பணியாளர் கிறிஸ்பின் லியோன் அடிகளார், யாழ் மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குனர் அருட்பணியாளர் சாள்ஸ் கொலின்ஸ் ஆகியோருடன் யாழ் இளைஞர் ஒன்றிய பிரதிநிதிகளாக மூன்று பேரும் திருமலை மட்டு நகர் பிரதிநிதிகளாக மூன்று பேரும் கொழும்பு பிரதிநிதிகளாக ஐந்து பேரும் மன்னாரிலிருந்து இரண்டு பேரும் மொத்தமாக இலங்கையிலிருந்து 13 இளைஞர் யுவதிகள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## பிறந்தநாள் வாழ்த்து பற்றிய அறிவித்தல்

உங்கள் மழலைச் செல்வங்களின் பிறந்தநாள் வாழ்த்துக்களை மன்னாவில் பிரசுரம் செய்து மகிழ விருப்பமா? அப்படியானால் நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் இதுதான். எந்த மாதத்தில் இவ்வாழ்த்து இடம்பெற வேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த மாதத்திற்கு முன்னைய மாதத்தில எமக்கு கிடைக்கக்கூடியவாறு பெயர், தாய் தந்தை பெயர், இடம், பிறந்த திகதி மாதம் ஆண்டு, புகைப்படப் பிரதி, ஆகியவற்றுடன் கட்டணமாக ரூபா 750 யும் எமக்கு அனுப்பி வையுங்கள். தகவல் தருபவரின் பெயர் முகவரியை (தொலைபேசி இருந்தால் அதன் எண்ணையும்) தவறாமல் குறிப்பிடவும். திருமறைப்பணி நிலையத்தில் பணிபுரியும் அருட்சகோதரி லோறன்சியா அவர்களிடம் அலுவலக நேரத்தில் நேரடியாகவும் கையளிக்கலாம். தகவல் தருபவரின் பெயர் முகவரிக்கு புகைப்படப் பிரதிகளை திருப்பி அனுப்பிவைப்போம்.

(பதிப்பாசிரியர்)

## நீங்காத நினைவுகள் பற்றிய அறிவித்தல

நங்காத நினைவுகள் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளும் இடம்பெற வேண்டும் என விரும்புகிறீர்களா? அப்படியானால் நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் இதுதான். எந்த மாதத்தில் இந்நினைவுகள் இடம்பெற வேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த மாதத்திற்கு முன்னைய மாதத்தில எமக்கு கிடைக்கக்கூடியவாறு நினைவுக் குறிப்பு, (அதாவது இறந்தவரின் முழுப்பெயர், இடம், பிறந்த திகதி ஆண்டு மாதம், இறந்த திகதி ஆண்டு மாதம், அஞ்சலிக் கவிதை அல்லது வசனம்) புகைப்படப் பிரதி என்பவற்றுடன் கட்டணமாக ரூபா 750 ஆகியவற்றை அனுப்பிவையுங்கள்.
தகவல் தருபவரின் பெயர் முகவரியை (தொலைபேசி இருந்தால் அதன் எண்ணையும்) தவறாமல் குறிப்பிடவும். திருமறைப்பணி நிலையத்தில் பணிபுரியும் அருட்சகோதரி லோறன்சியா அவர்களிடம் அலுவலக நேரத்தில் நேரடியாகவும் கையளிக்கலாம். தகவல் தருபவரின் பெயர் முகவரிக்கு புகைப்படப் பிரதிகளை திருப்பி அனுப்பிவைப்போம்.

(பதிப்பாசிரியர்)

# நீங்காத நினைவுகள்

விண்ணக வாழ்வில்

**7வது ஆண்டு**

மண்ணில் 18 - 12 - 1931



விண்ணில் 29 - 09 - 1995

சவிரிமுத்து மனுவேல் பிள்ளை

விடத்தல் தீவு

நம்ப முடியவில்லையே நாயகனே உம் பிரிவு
வெம்பித் தவிக்கின்றோம் வெந்துயரில் வாடுகின்றோம்.
எம் பெருமான் இயேசு உவந்தளித்த பாதையில் நீர்
துன்பம் எதுவுமின்றித் தூயவனாய்ச் சென்றீரோ?
தாய்ப்பறவை தனையிழந்த குஞ்சுகளாய்த் தவிக்கின்றோம்.
மேய்ப்பனவன் இல்லாத மந்தைகளாய் துடிக்கின்றோம்.
கண்ணின் மணியிழந்தோம். கைப்பொருளெல்லாமிழந்தோம்
மண்ணின் மடிமீது மனம் புழுங்கித் தவிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், உற்றார்,உறவினர்.
7ம் வட்டாரம், விடத்தல்தீவு.

## உங்கள் மிகச் சிறந்த அன்பளிப்பு மன்னா

யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்!

உங்கள் உறவினர் நண்பர்களுக்கு மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்!
உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ உள்ள உங்கள் உறவினர் நண்பர்களுக்கு நீங்கள் வழங்கக் கூடிய

சிறந்த ஞாபகப் பரிசு மன்னா

நீங்கள் ஆவலோடு படித்து சுவைக்கும் மன்னாவை தூர இடத்தில் இருக்கும் உங்கள் உறவினர் நண்பர்களும் படித்து சுவைக்கும்படி செய்யலாமே!
அப்படியாயின் நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் இதுதான். உங்கள் உறவினர் அல்லது நண்பரின் பெயர் முகவரிகளை தெளிவாக எழுதி சந்தாப்பணத்தையும் எமக்கு அனுப்பி வைக்கவும்.

உங்கள் உறவினர் - நண்பரின் வீடு தேடி மனனா பறந்து செல்லும்.

உள்நாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக இலங்கை ரூபா 200யும் வெளிநாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக இலங்கை ரூபா 1000யும் (10 யூரோ) அனுப்பவும். சந்தாப்பணத்தை அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது காசுக் கட்டளை மூலமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ அனுப்பலாம்.

காசோலை மூலம் அனுப்புவதாயின்
வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd. Mannar.
பணம்பெறுபவர் பெயர்: the Editor. - MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/ A No. 02 - 1678001 - 5

## மன்னா சந்தாதாரர்களே!

உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் மாதம் உங்களுக்கு தபால் மூலம் அனுப்டப்படும் மன்னாவின் உங்கள் முகவரிக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப்பார்த்து உங்கள் சந்தாவை உரிய காலத்தில் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

மன்னா தனிப்பிரதிகளுக்கான ஆண்டுச்சந்தா
உள்நாடு - இலங்கை ரூபா 200
வெளிநாடு - இலங்கை ரூபா 1000 (10 யூரோ)



## தொடர்புகளுக்கு


| அலுவலக முகவரி | வதிவிட முகவரி |
| --- | --- |
| பதிப்பாசிரியர், மன்னா திருமறைப்பணி நிலையம், செபஸ்ரியார் வீதி, மன்னார். (தொலைபேசி 023. 32377) | பதிப்பாசிரியர், மன்னா பங்குப்பணிமனை, புனித் லோறன்சியார் ஆலயம், தலைமன்னார். (தொலைபேசி 023. 33011) |
| OFF. ADDRESS | RES. ADDRESS |
| The Editor, MANNA, Pastoral Centre, St. Sebestian's Street, Mannar, Sri Lanka. | The Editor, MANNA , Parish House, St. Lawrence Church, Talaimannar, Sri Lanka. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - இல. 5

## திருத்தூதர் பணிகள் 1-28 வரை (புதிய மொழி பெயர்ப்பு)

வாசகர்களே மாணவர்களே உங்கள் விவிலிய அறிவை பரீட்சிக்கவும் விவிலியத்தை வாசிக்கத் தூண்டவும் இக்குறுக்கெழுத்துப் போட்டியை தொடர்ச்சியாக நடாத்த திட்டமிட்டுள்ளோம். கீழே உள்ள பெட்டிகளைக் கொண்ட படிவத்தை நீங்களே தயாரித்து வெற்றிடங்களை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். (வெட்டி அனுப்புவதானால் உங்கள் மன்னா பத்திரிகையை பாதுகாத்து வைக்க முடியாமல் இழக்க நேரிடும்) உங்கள் விடைகளை 30. 10. 2002க்கு முன் எமக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஷ்டசாலிகளுக்கு பரிசுத் தொகைகள் அனுப்பி வைக்கப்படும்.




**1ம் பரிசு -ரூபா 250**
**2ம் பரிசு - ரூபா 150**
**3ம் பரிசு - ரூபா 100**

### இடமிருந்து வலம்

1. "உமது ------------------- அணிந்து கொண்டு என்னைப் பின் தொடரும்"
2. அவர்கள் நாங்கள் எழுதுகிற இவற்றை தங்கள் ------------ மூலம் உங்களுக்கு அறிவிப்பார்கள்.

6. காவலர்கள் --------------- கு முன் சிறையைக் காவல் செய்து கொண்டிருந்தனர்.(குழம்பியுள்ளது)
14. அவர்களுள் சிலர் அதை நம்பி பவுல் ------------ ஆகியோருடன் சேர்ந்து கொண்டனர்.
16. கொரிந்தியருள் பலரும் பவுல் கூறியவற்றைக் கேட்டு நம்பிக்கை ----------------- திருமுழுக்குப் பெற்றனர்.
18. ஓய்வு நாளன்று நாங்கள் நகரவாயிலுக்கு வெளியே வந்து ----------------- ச் சென்றோம்.
20. அவருக்குத் ------------ ஏதும் ஏற்படாததைக்கண்டு தங்கள் எண்ணத்தை மாற்றிக் கொண்டார்கள்.
22. நீங்கள் மோளோக்குடைய -------------- உங்கள் தெய்வமாகிய இரேப்பானுடைய விண்மீனையும் தூக்கிக் கொண்டு சென்றீர்கள்.
24. நான் ஆண்டவர் யேசுவின் பெயருக்காக எருசலேமில் கட்டப் ----------------- மட்டுமல்ல, சாவதற்கும் தயார் என்றார்.

### கீழிருந்து மேல்

10. அவ்வாறிருக்க நம்முடைய ------------ களில் இவர்கள் பேசுவதை நாம் ஒவ்வொருவரும் கேட்பதெப்படி?(தாய்மொழி)
12. நல்லெண்ணத்தைப் பெற்று அரசனோடு ----------------- ஏற்படுத்திக் கொள்ள விரும்பினார்கள் ( இறுதி எழுத்து விடப்பட்டுள்ளது)
13. "நாசரேத்து இயேசுக்கிறிஸ்துவின் பெயரால் எழுந்து நடந்திடும்" என்று கூறி அவரது --------------- ப் பிடித்துத் தூக்கி விட்டார்.
16. கடவுளிடம் திரும்பும் பிற இனத்தாருக்கு நாம் தொல்லை........... ஆகாது. (இறுதி எழுத்து விடப்பட்டுள்ளது).
17. திருத்தூதரை இழிவுபடுத்தி --------- எறியத்திட்டமிட்டனர்.
22. -------------- செய்வது அவர் தொழில்
23. அங்கே கப்பலிலுள்ள --------------- இறக்கப்பட்[illegible].
25. இதைக்கேட்ட மக்கள் ஆண்டவராகிய இயேசுவி[illegible] பெயரில் ---------------- குப் பெற்றனர்.

### வலமிருந்து இடம்

3. உம் தூயவனைப் ------------- யைக் காண விடமாட்டீர்.
5. மோயீசனின் சட்டத்தை அறிவிப்போர் முற்காலத்திலிருந்தே ---------- நகரங்களிலும் இருக்கின்றனர்.
8. ------------- பெற்றுக் கொண்டு அவர்களை விடுதலை செய்தான்.
11. அவர் -------------- எனப்பட்ட படைப்பிரிவின் நூற்றுவர் தலைவன்.
15. ------------ இரவாக சகோதரர் சகோதரிகள் பவுலையும் சீலாவையும் பெரோயா நகருக்கு அனுப்பி விட்டார்கள். (இறுதி எழுத்து மாறியுள்ளது)
16. அங்கு தியத்திரா நகரைச் சேர்ந்த பெண் ஒருவர் நாங்கள் பேசியதைக் கேட்டுக் ------------ (இறுதி எழுத்து விடப்பட்டுள்ளது)
19. மறுநாள் நாங்கள் --------------- துறைமுகம் போய்ச் சேர்ந்தோம்.
21. அங்கிருந்து நாங்கள் கப்பலேறி --------------- வீசியபடியால் சைப்பிரசு தீவின் பாதுகாப்பான பகுதி வழியாகச் சென்றோம்.
26. --------------- என்னும் இளைஞர் ஒருவர் பலகணியில் உட்கார்ந்திருந்தார்.

### மேலிருந்து கீழ்

1. குறித்த நாளில் ஏரோது அரச ஆடை அணிந்து ------------ அமர்ந்து அவர்களுக்கு உரையாற்றினான்.
2. யூதாசைக் குறித்துத் தூய ஆவியார் தாவீதின் -------------- முன்னுரைத்த மறைநூல் வாக்கு நிறைவேற வேண்டியிருந்தது.
4. அடுத்த -------------- நாளிலும் இவைபற்றி தங்களோடு பேசும்படி மக்கள் அவர்களை அழைத்தனர்.(விடை குழம்பியுள்ளது)
7. ------------- என்றாலே மந்திரவாதி என்பதுதான் பொருள்.
9. பெரும் கருத்து வேறுபாடும் ------------ உண்டாயின. (விடையில் இரண்டாவது எழுத்து விடுபட்டுள்ளது.)
12. சகோதரர் சகோதரிகளிடையே ------------ பெற்றவர்.
17. பின் சீரியாவுக்குக் -------------- ப் போகும் போது யூதர்கள் அவருக்கு ......... மசிதோனியா வழியாகத் திரும்பத் தீர்மானித்தார்.

> **விவிலியக்**
> **குறுக்கெழுத்துப் போட்டி**
> **இல. 4 ற்கான விடைகளை**
> **ஐப்பசி மாத மன்னாவில்**
> **எதிர்பாருங்கள்.**

## நேர்காணல்........ 2ம் பக்கத் தொடர்ச்சி

கேள்வி : உங்கள் விடுமுறையின்போது எந்தெந்த நாடுகளுக்கு சென்றீர்கள், அங்கு எமது தமிழ் மக்கள் எப்படி இருக்கிறார்கள்? இன்றைய சமாதான சூழ்நிலையை எவ்வாறு அவர்கள் பார்க்கிறார்கள்?

பதில் : சுவிஸ், பிரான்ஸ், ஜேர்மனி, கொலண்ட், இங்கிலாந்து, கனடா ஆகிய நாடுகளுக்குச் சென்றேன். அங்குள்ள நமது மக்கள் மிகவும் கஸ்ரப்பட்டு உழைக்கின்றார்கள். அதிகப் பணம் செலவளித்து வெளிநாடுகளுக்கு போனவர்கள், இதுவரையும் நிரந்தர வதிவிட அனுமதி பெறாதவர்கள் போன்றோர் இன்றைய சமாதான சூழ்நிலை மட்டில் அதிக உற்சாகம் அடைந்தவர்களாக காணப்படவில்லை. எங்கே தாம் தாய் நாட்டிற்கு அனுப்பப்பட்டுவிடுவோமோ என்று பயப்படுகிறார்கள்.

கேள்வி : உயர் கல்வி மற்றும் வெளிநாட்டுப்பயணம் தொடர்பாக உங்களது தனிப்பட்ட அனுபவத்தை, அல்லது எண்ணப்பதிவை சொல்ல முடியுமா?

பதில் : உண்மையில் இந்தப் பயணம் என்னைப் பல வழிகளில் வளர்த்துள்ளது. பல இனத்தவர்கள் - வெவ்வேறு கலாச்சாரப் பண்பாடுகளைக் கொண்டவர்களோடு பழகியதால் எனது உலகப்பார்வை விசாலப்படுத்தப்பட்டுள்ளதை உணர்கிறேன். பரந்த மனப்பான்மையோடு சிந்திக்கவும் செயலாற்றவும் இது எனக்கு உதவும் என நம்புகிறேன்.

கேள்வி : உங்களது அடுத்த நியமனம் என்ன என்று கூறுவீர்களா?

பதில் : யாழ் புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் குருத்துவ மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கச் செல்ல இருக்கிறேன்.

மன்னா : உங்கள் எதிர்கால கற்பித்தல் பணி சிறக்க மன்னாவின் மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

## மன்னார் மறைமாவட்ட[illegible]...

1ம் பக்கத் தொடர்ச்சி

மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் இடம்பெற்ற இக் கருத்[illegible]ர்வை இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த நான்[illegible] குருக்களும் ஒரு பொதுநிலையினரும் நெறிப்படுத்தினர். அருட்பணியாளர்கள் தோமஸ் குலங்காரா (கேரளா), கிலன் மஸ்சரின்கஸ் (மங்களூர்), சூசை அலங்காரம் (திருச்சி), றொக் ஆகியோருடன் பொதுநிலையினரான திரு. றொபேட் ஆகியோரே இந் நிகழ்வை நெறிப்படுத்தியவர்களாவர். இத்தாலி தேச[illegible]தவரான திரு றொபேட் அவர்கள் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக இந்தியாவில் தங்கியிருந்து பணியாற்றிவருகின்றார். இவரே இந்தியாவில் ∴போக்கோலாரே இயக்கத்திற்கு பொறுப்பாக இருக்கின்றார்.

மூன்று நாட்கள் இடம்பெற்ற இக்கருத்தமர்வில் மன்னார் மறைமாவட்ட ஆயர் உட்பட மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்கள் துறவறசபை சகோதர சகோதரிகள் ஆகியோர் மிகுந்த ஈடுபாட்டுடன் பங்கெடுத்ததை காணமுடிந்தது

## விவிலியகுறுக்கெழுத்துப் போட்டி இல. 3ல்

**சரியான விடைகளை அனுப்பியவர்களில்**

### பரிசு பெறும் முன்று அதிஸ்ரசாலிகள்

*முதலாம் பரிசு*
தோமஸ் ஜஸ்மின்
தி.கு.க.மடம்
ரி.ஆர்.ஐ
மட்டக்கல
தலவாக்கெல

*இரண்டாம் பரிசு*
K. உமா
யேசுபுரம்
வவுனியா

*முன்றாம் பரிசு*
V. வினோஜா
ஜோசவ் நகர்
தோட்டவெளி

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 42 பேர்
சரியான விடைகளை எழுதியோர் 30 போ

### பாராட்டுப் பெறும் 10 அதிஸ்ரசாலிகள்

1. K. கமிலஸ், கருங்கண்டல், அடம்பன்.
2. செ. கிளான்சி, தலைமன்னார் பியர், தலைமன்னார்.
3. வே. அமலநாயகி, ஆவணம், நானாட்டான்.
4. ஞா.க. கிறிஷாந்தி, முதலைகுத்தி, உயிலங்குளம்
5. ஜெனிபர், நொச்சிக்குளம், உயிலங்குளம்
6. ம. கொன்சலிற்றா, தி.கு.க.மடம், இறம்பைக்குளம், வவுனியா.
7. அ.தர்சினி பெரேரா, அன்ரனிஸ் வீதி, 8ம் வட்டாரம், பேசாலை.
8. A.M.மஞ்சுரிக்கா, 1பிறேமஸ்ரன், நெல்லியடி, கரவெட்டி
9. S.கிளேற்றாஸ்ரைன் வாஸ், 4ம் வட்டாரம், வங்காலை.
10. அ.மெடோசன்பெரேரா, அன்ரனீஸ் வீதி, 8ம் வட்டாரம், பேசாலை

## விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி இல.3 (லுக்காஸ் நற்செய்தி) சரியான விடைகள்

**இடமிருந்து வலம்**
1. மலைத்து
5. இறையாட்சி
9. சாவடியில்
10. வியப்புற்றனர்
11. ஆடை அணிந்த
17. ஒற்றர்களை
20. புடைக்க

**வலமிருந்து இடம்**
2. புறப்படும் போது
3. சுடர்முள்
6. மனத்தில்
7. திருத்தூத(ர்)
13. இறைவாக்கினர்
15. நாவன்மையையும்
18. ஆடைகளை
19. முன்னதாகவே

**மேலிருந்து கீழ்**
1. மன்றாடினார்
2. புரிவதில்
4. தொல்லையின்
8. தூய ஆவியை
10. விவாதம்
13. இடங்க(ள்)
14. கற்க(ள்)
16. இறக்கி

**கீழிருந்து மேல்**
4. தொல்லை
10. விழித்தபோது
12. ஓரிடத்தில்
14. கவின்
17. ஒழித்து

## நீடித்த சமாதானம் வேண்டி .....

1ம் பக்கத் தொடர்ச்சி

மனிதரால் முடியாதது ஆண்டவரால் முடியும் என்ற நம்பிக்கையோடு மக்கள் இந்நிகழ்வுக்கு கூடி வந்தனர். மனித முயற்சியை நம்பாமல் ஆண்டவரின் அருளில் நம்பிக்கை வைத்து அவரில் சரணடைகின்ற ஒரு நிகழ்வாக இது அமைந்திருந்தது.

அருட்பணியாளர்கள் டலிமா, நேசன், பெனோ, யூட் குருஸ் ஆகியோர் இச்செப வழிபாட்டை நெறிப்படுத்தினர். வழிபாட்டின் இறுதியில் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் வருகை தந்த மக்களுக்கு நன்றி தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆசிய இளைஞர் தின திருயாத்திரைச் சிலுவை மன்னாருக்கு வருகை தந்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. மன்னார் மறைமவாட்டக் குருக்கள் இச்சிலுவையைப் பெற்று முத்தி செய்கிறார்கள். மன்னார் மறைமாவட்டட இளைஞர் ஆணைக்குழு இயக்குனர் அருட்பணியாளர் ஞானாதிக்கம் அடிகளார் திருச்சிலுவையை சம்பிரதாய முறைப்படி பெற்றுக்கொள்கிறார்.

முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருச்சிலுவை வைக்கப்பட்டிருப்பதையும் அதையடுத்து மன்னாரை நோக்கி இச்சிலுவை வாகனத்தில் பவனியாக எடுத்து வரப்படுவதையும் காண்கிறீர்கள்.
(படங்கள் - மன்னார் சமுகத் தொலைத்தொடர்பு நிலையம்)

# ஒலி நாடாக்கள்

## திருப்பாடல்கள் பாகம் 4,5,6, சி. டி. பாகம் 3,4 வெளிவந்துள்ளன



பல கிறிஸ்தவ ஒலி நாடாக்களை வெளியிட்டுள்ள திரு அம்புறோஸ் பீற்றரின் தயாரிப்பில் திருப்பாடல்கள் பாகம் 4,5,6 ஒலி நாடாக்களும் சி. டி. பாகம் 3,4 ஆகியவையும் வெளிவந்துள்ளன. இவை திருவிவிலியத்தில் காணப்படும் திருப்பாடல்கள் என்னும் நூலில் உள்ள சங்கீதங்களை தழுவி எழுதப்பட்டவையாகும். கொழும்பு மறைமாவட்ட முன்னாள் பேராயர் அதி வண. நீக்கிலஸ் மாக்கஸ் பர்னாந்து ஆண்டகையின் ஆசியுரையுடன் வெளிவந்துள்ள இவ்வொலி நாடாக்கள் திருவழிபாட்டில் பயன்படுத்தக் கூடியவையாகும். முதல் மூன்று பாகங்கள் வெளிவந்துள்ளதுடன் தொடர்ந்து இன்னும் ஒன்பது பாகங்கள் வெளிவர உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வொலி நாடாக்களை மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

# ஆயுள் உயர்வு

100வது வயது வரை உயிர் வாழ்பவர்களின் எண்ணிக்கை வருடாந்தம் உயர்ந்து வருவதாக கணிப்பீடு தெரிவிக்கின்றது. உலகெங்கும் வாழும் சுகதேகிகளை வைத்து எடுத்த கணிப்பீட்டிலேயே இம் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒருவரின் வாழ்நாள் எல்லை வருடத்திற்கு 3 மாதங்களாக உயர்கிறது என கடந்த 160 வருடங்களாக மேற்கொண்டுவரும் ஆய்வு தெரிவிக்கின்றது.

இவ்வளர்ச்சி இவ்வாறு தொடருமேயானால் இன்னும் 60 வருடங்களில் மனிதனின் உயிர் வாழும் காலம் சராசரி 100 வருடங்களாக உயரும் என தெரிவிக்கப்படுகின்றது. மேற்குலக நாடுகளில் பிறப்பு விழுக்காடு அரிதாகி முதியோர் வயது அதிகரித்துச் செல்வது பலவிதமான எதிர்காலச் சிக்கல்களைத் தோற்றுவிக்குமென ஆராட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# மடுப்பதியில் பாரிய புனரமைப்பு வேலைகள் விரைவில் ஆரம்பமாகும்

மடுப்பதியில் பாரிய புனரமைப்பு வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது. கடந்த செப்ரம்பர் மாதம் 17ந் திகதி மடுவில் இடம்பெற்ற மன்னார் மறைமாவட்டக் குருக்களின் மாதாந்த ஒன்று கூடலின்போது மன்னார் ஆயர் அவர்கள் இதுபற்றிய விபரங்களை வெளியிட்டார். குருக்களுக்கான கட்டிடத்தொகுதி, திருவிழாக் காலங்களில் மக்கள் வந்து தங்குவதற்கான வீடுகள், புதிய கிணறுகள், தண்ணீர் தாங்கிகள், உள்ளக வீதிகள் என பல வேலைகள் மடுத்திருப்பதியில் இடம்பெற உள்ளன. கடந்த 20 ஆண்டுகாலப் போர்ச் சூழ்நிலையில் மடுவில் எந்தவிதமான புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாத நிலை காணப்பட்டது. அதுமட்டுமன்றி பல ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான அகதிகளின் புகலிடமாகவும் மடுத்திருப்பதி விளங்கியது குறிப்பிடத்தக்கது.

## பங்குகளில் அருட் சகோதரர்கள

மன்னார் மறைமாவட்ட அருட் சகோதரர்கள் தமது இடைக்கால பயிற்சிக்காக பங்குகளுக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள். யாழ் சவேரியார் குருத்துவக் கல்லூரியில் மெய்யியல், இறையியல் கல்வியை முழுமையாக நிறைவு செய்து திருத்தொண்டர்களாக திருநிலைப் படுத்தப்படவிருக்கும் ஐந்து அருட்சகோதரர்களும், மற்றும் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியில் இரண்டாமாண்டு இறையியலை நிறைவு செய்த மூன்று அருட் சகோதரர்களும், யாழ் சவேரியார் குருத்துவக்கல்லூரியில் மெய்யியல் கல்வியை நிறைவு செய்த ஐந்து அருட் சகோதரர்களும் மொத்தமாக பதின் மூன்று அருட்சகோதரர்கள் பங்கு மேய்ப்புப் பணி அனுபவத்தைப் பெறுவதற்காக மன்னார் மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

# தடைகளைத் தாண்டுவோம்


## பேராயரிடம் பிரதமர் தெரிவிப்பு

“சமாதானப் பேச்சுவார்த்தைகளில் உடன் பயன் கிட்டுமென ஒருபோதும் எதிர்பார்க் முடியாது. நிரந்தரத் தீர்வினை அடைய நீண்டகாலம் எடுக்கலாம். பல தடைகள் ஏற்படலாம். இத் டகளைக் கண்டு நாம் சோர்ந்து போகமாட்டோம்” என கொழும்புப் பேராயரிடம் பிரத ரணில் தெரிவித்துள்ளார். பேராயர் ஒஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகை கொழும்பு பேராயராக பதவியேற்ற பின்னர் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவரை அவரது பொரளை பேராயர் இல்லத்தில் முதல் தடவையாகச் சந்தித்தார். அப்போதே பிரதமர் மேற் கண்டவாறு தெரிவித்தார். 45 நிமிடங்கள் நீடித்த மேற்படி சந்திப்பின்போது இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாண விடுதலைப் புலிகளுட ் நடைபெற இருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக பிரதமர் பேராயருக்கு விளக்கம் அளித்தார்.

பிரதம ின் சமாதான முயற்சிகளை வரவேற்ற பேராயர் இந்த நிலைப்பாட்டில் உறுதியாகச் செயல்பட்டு முன்னேறி செல்லுமாறு வேண்டுகொள் விடுத்ததுடன் தம்மாலான சகல ஒத்துழைப்பையும் வழங்க ஆயத்தமாக உள்ளதாகவும் தெரிவித்தார். இச்சந்திப்பின்போது உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவும் பேராயரின் செயலர் அருள்திரு சிசில் பெரேராவும் உடன் இருந்தனர்.

# திருத்தந்தையின்

## பிலிப்பைன்ஸ் விஜயம் ரத்து



பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் அடுத்த ஆண்டு முற்பகுதியில் பிலிப்பைன்ஸிற்கு மேற்கொள்ளவிருந்த தனது விஜயத்தை ரத்துச் செய்துள்ளார்.

ஆசியாவின் ஒரே ஒரு கத்தோலிக்க நாடான பிலிப்பைன்ஸில் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் 23ம் திகதி முதல் 26ம் திகதி வரை சர்வதேச கிறிஸ்தவ மாநாடொன்று நடைபெற விருக்கிறது. இம்மாநாட்டில் பாப்பரசர் கலந்து கொள்ளமாட்டார் என வத்திக்கான் அறிவித்துள்ளது. ஆனால் இப்பயணம் ரத்துச் செய்யப்பட்டதற்கான காரணம் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

# ஆயரை வெளியேற்றிய ரூசியா

கத்தோலிக்க ஆயர் ஒருவர் ஏன் மீண்டும் தனது சைபீரிய மறைமாவட்டத்துக்குச் செல்லக்கூடாது? என வத்திக்கான் விடுத்த விளாவுக்கு ரூசியா அரசு மௌனத்தையே பதிலாக்கியுள்ளது.

இதற்கிடையில் அண்டைய நாடுகளில் உள்ள ஆலயக் குழுக்கள் ரூசியா கத்தோலிக்க திருச்சபைக்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியிருக்கின்றன. புனித வளனார் சபை ஆயர் யேசி மசூர் வார்சோவிலிருந்து மொஸ்கோ பிரதான விமான நிலையத்தை ஏப்ரல் 19ல் அடைந்து தமது பல் நாட்டு வதிவிட் உரிமை கொண்ட கடவுச் சீட்டைக் காண்பித்த பொழுது, எல்லைப்புறக் காவலர்களால் நாட்டின் உள்ளே வரமுடியாதோர் பட்டியலில் அவரது பெயரும் உள்ளதாக அவருக்குக் கூறப்பட்டு உள் நுழையும் அனுமதி மறுக்கப்பட்டது.



## வவுனியா அமதிகள் கலைத் தொடர்பு நிலையத்தின் மருதமடு அன்னை பாடல்கள் ஒலி நாடா வெளியீடு

மருதமடு அன்னையின் பாடல்கள் என்னும் ஒலிநாடாவையும் இசைத்தட்டையும் வவுனியா அமதிகள் கலைத் தொடர்பு நிலையம் அண்மையில் வெளியிட்டு வைத்துள்ளது. வவுனியாவில் 26A குட்செட் வீதியில் அமைந்துள்ள புதிய அமதிகள் கலைத்தொடர்பு நிலையமே மேற்படி ஒலிநாடாவையும் இசைத்தட்டையும் வெளியிட்டுள்ளது. இதில் மாதா பற்றிய பழைய பாடல்களும் உள்ளடககப்பட்டுள்ளதாக தயாரித்த நிலையப் பொறுப்பாளர் அருள்திரு லீனஸ் அ.ம.தி கருத்து தெரிவித்தார். அவ்விசைத்தட்டின் படத்தினையே மேலே காண்கிறீர்கள்.

## பேசாலை மிராண்டா ஆசிரியரின் மர்மத்தளபதி – நாட்டுக் கூத்து நூல் வெளியீடு

பேசாலையைச் சேர்ந்த எஸ். ஏ. மிராண்டா ஆசிரியரின் “மர்மத் தளபதி” என்ற புனித செபஸ்தியார் நாட்டுக்கூத்து நூல் வெளியீட்டு விழா செப்டம்பர் மாதம் 7ம் திகதி பேசாலையில் இடம் பெற்றது. பல்கலைக்கழக பேசாலை மாணவர் அமைப்பு ஏற்பாடு செய்து இவ்வெளியீட்டு விழாவில் அருட்பணியாளர் பிலேந்திரன் அடிகளார் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்தார். ஆய்வுரையை அருட்பணியாளர் தேவறாஜா கொடுதோர் நிகழ்த்தினார்.

(இந்நூல் பற்றிய மேலதிக விபரங்களை பக்கம் 6ல் காணலாம்)



இப்பத்திரிகை தலைமன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு கொட்டாஞ்சேனை அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org